பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 08 திங்கட்கிழமை 23.11.2020 கதிர் 18

## இது இரகசியம் அல்ல!

கொரோனாத் தொற்று நெருக்கடிகளுக்கு மத்தியில் இம்மாதம் இரண்டாம் வாரத்தில் யாழ்ப்பாணம் செயலகத்தில் ஒன்றை விட்ட இரு நாள்கள் அடுத்தடுத்து நடைபெற்ற இரு கூட்டங்களின் திருக்கூத்து சந்தி சிரித்தது தெரிந்த விடயம்.

பக்கம் 02

## தேசியப்பட்டியல் ஆசனம் யாருக்கு?

### இன்று இறுதி முடிவு என்கிறது ஐ.தே.க

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் உறுப்பினரைத் தெரிவு செய்வது குறித்து இன்று இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பக்கம் 02

## நினைவேந்தல் உரிமையைத் தடுத்துநிறுத்தி சர்வாதிகாரத்தின் உச்சநிலையைக் காட்டாதீர்

### கோட்டாவுக்கு சஜித் எச்சரிக்கை



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டின் மூவின மக்களுக்கும் ஜனாதிபதி என்றால் அனைவருக்கும் சமவுரிமையை வழங்கவேண்டும். தமிழர்களின் நினைவேந்தல் உரிமையைத் தடுத்து நிறுத்தி சர்வாதிகாரத்தின் உச்ச நிலையைக் காட்ட வேண்டாம் என்று அவரிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

'கோட்டாபய

பக்கம் 02

# 20 ஆயிரத்தைக் கடந்தது தொற்றாளர் எண்ணிக்கை

## மூன்றாவது அலையில் மட்டும் 16,647 பேர் பாதிப்பு



கொழும்பு, நவம்பர் 23

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 20 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

நேற்றும் 391 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

பக்கம் 02

## 7 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு கொழும்பு மாவட்டத்தில் கொரோனா

கொரோனா வைரஸ் தாக்கத்தின் மூன்றாவது அலையால் கடந்த ஒக்டோபர் 4 ஆம் திகதியில் இருந்து நேற்று வரை கொழும்பு மாவட்டத்தில் 7 ஆயிரத்துக்கும்மேற்பட்டோருக்குக்கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது.

அங்கு நேற்றுமுன்தினம் மாத்திரம் 292 புதிய தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 9 பேர் சாவடைந்துள்ளனர்.

பக்கம் 02

## திருவையாறில் மரண வீட்டிற்கு சென்றோர் தனிமைப்படுத்தலில்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,நவ.23

கிளிநொச்சி திருவையாறில் இடம்பெற்ற மரண வீட்டிற்கு கொழும்பில் இருந்து வந்த ஒருவர் பங்குபற்றியதால் 43 குடும்பங்களைச்

பக்கம் 02

## இலங்கையில் இனப்படுகொலையை தடுப்பதற்கு தவறிவிட்டது ஐ.நா. சபை

### அமெ.முன்னாள் ஜனாதிபதி ஒபாமா குற்றச்சாட்டு



இலங்கை போன்ற இடங்களில் இனப்படுகொலைகளைத் (Ethnic Slaughter) தடுக்க ஐக்கிய நாடுகள் சபை தவறிவிட்டது.

– இவ்வாறு அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா குற்றஞ்சாட்டியுள்ளார்.

'உறுதியளிக்கப்பட்ட நிலம்' (A Promised Land) என்னும் தனது நினைவுத் தொகுப்பு நூலில் ஐ. நாவின் கையாகலாகாத் தனத்தை இவ்வாறு பதிவு

பக்கம் 02

## கொரோனா வைரஸ் தொற்றால் அலரிமாளிகை 'லொக்டவுணா'?

### இல்லை என மறுக்கின்றது பிரதமர் அலுவலகம்

அலரி மாளிகை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது என வெளியாகிய செய்தி உண்மைக்கு புறம்பானவை என்று பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில்

பக்கம் 02

## நாள்தோறும் கொரோனா சாவு கொழும்பில் நேற்றும் 4 பேர் பலி

### இதுவரை 87 பேர் உயிரிழப்பு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்றும் 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த 2 ஆண்களும், 2 பெண்களுமே சாவடைந்துள்ளனர்.

கொழும்பு 15 ஐச் சேர்ந்த 70 வயதுடைய பெண் ஒருவரும், கொழும்பு 12 ஐச் சேர்ந்த 53 வயதுடைய ஆண் ஒருவரும், பொரளை பிரதேசத்தைச் சேர்ந்த 84 வயதுடைய பெண் ஒருவரும் மற்றும் கொழும்பு 10 ஐச் சேர்ந்த 75 வயதுடைய ஆண் ஒருவரும் நேற்று கொரோனாவால் உயிரிழந்துள்ளனர்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின்

பக்கம் 02

## எகிறும் சிறைக் கொத்தணி இதுவரை 652 பேர் பாதிப்பு

சிறைச்சாலைகளில் நேற்றும் 35 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதையடுத்து சிறைச்சாலை கொத்தணியில் கொரோனாத் தொற்று உறுதியானவர்களது எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது எனச் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக நேற்று மேலும் கைதிகள் 31 பேருக்கும், சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் 4 பேருக்கும் என 35 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன்படி சிறைச்சாலைக் கொத்தணியில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களது

பக்கம் 02



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பிலிருந்து பட்டாளத்துடன் படை எடுத்த அமைச்சர்களும் இங்குள்ள அதிகாரிகள், அரசியல் தலைவர்கள் என சம்பந்தப்பட்டோரும் குறுகிய செயலக மண்டபத்தில் சுமார் 250 பேர் கூடியிருந்து நடத்திய திருவிழா தெரிந்த விவகாரம் தான்.

கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டம் என்ற பெயரில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கான கூட்டமே நடைபெற்றது.

அபிவிருத்திக்கானதுதானே, கூடி ஆராய்ந்தால் நல்லதுதானே, அதனை ஏன் கொரோனாவைக் காட்டி குழப்புவான் என்று விட்டாலும் கூட, அது இந்தப் பிரதேச மக்களை ஏமாற்றி காதில் பூச்சுற்றும் காரியமே என்பதை அறியும் போது சீற்றம் தான் வருகின்றது.

வெறுங்கையை வைத்து முழம் போட்ட வேலைதான் அந்தக் கூட்டம்.

சில அரசியல்வாதிகளும் சேர்ந்து கற்றறிந்த யாழ். வர்க்கத்தின் காதுகளில் பூச்சுற்றிய பக்கா சுத்துமாத்து விளையாட்டுத்தான் அது.

அவற்றில் ஒரு கூட்டம் கடந்த 8ஆம் திகதி காலை 9.30 மணி முதல் யாழ். செயலகத்தில் நடந்தது. அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தலைமை வகித்தார்.

கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் பொருட்டு சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் குழுவின் யாழ்.மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கான கூட்டம் இது என்று தெரிவிக்கப்பட்டது.

கல்வி, இளைஞர் விவகாரம், விளையாட்டுத்துறை என்று பல்வேறு விடயங்கள் குறித்து நீட்டி, முழக்கிப் பேசினார்கள். அந்தக் கூட்டத்தின் அறிக்கையைப் பார்த்தால் பூரித்துப் போவீர்கள்.

அது செய்வது, இது செய்வது என்று பல திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டன. ஒவ்வொன்றுக்கும் இவ்வளவு மில்லியன் ரூபா என்ற கணக்கு விவரங்கள் கூட. பேசப்பட்ட எல்லா விடயங்களையும் செய்வதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருப்பது போலத் தான் அங்கு கருத்துத் தெரிவித்திருப்பார்கள் போலபட்டது. இந்தளவு செலவில் அந்தத் திட்டத்தை முன்னெடுப்பது, அந்தளவு செலவில் இந்தத் திட்டத்தை முன்னெடுப்பது என்றெல்லாம் அறிவிப்புகள் பறந்தன.

கூட்டறிக்கையைப் பார்த்த எனக்கு அளவில்லா மகிழ்ச்சி, யாழ்ப்பாணமும் கிளிநொச்சியும் அபிவிருத்தியில் பூத்துக் குலுங்கப் போகின்றன என்ற பேருவகை.

ஆனாலும், அந்த அறிவிப்புகளுக்குள் ஏதோ ஒரு விடயம் இடறுப்படுவதாக எனக்குப்பட்டது.

தேடிப் துளாவினேன். அப்போதுதான் ஒரு விடயம் புரிந்தது.

நாட்டின் வரவு – செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு விட்டது. சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியைப் பார்த்த போது எனக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

மேற்படி பல அமைச்சுகளும் யாழ் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தில் உடனடியாக செய்யப் போவதாக இங்கு கூட்டத்தில் அறிவித்த திட்டங்களுக்கு உண்மையில் தேவையான நிதியின் இரட்டிப்பு பங்கு கூட அந்தந்த அமைச்சுகளுக்கு இந்த வரவு – செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படவில்லை.

இந்த அமைச்சுகள் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் நிறைவேற்றுவதாக மக்களுக்கு வாக்குறுதி அளித்த தொகையை அவை இங்கு செலவிட்டால் அத்துடன் அந்த அமைச்சுகளுக்கு மூடு விழா நடத்த வேண்டியதுதான். வேறு மாவட்டங்களின் திட்டங்களையோ அல்லது தேசிய திட்டங்களையோ முன்னெடுக்க அவற்றிடம் நிதியே அதற்குப் பிறகு இருக்காது.

அப்படி இருக்கையில், அவை இந்தக் கொரோனா நெருக்கடி காலத்தில் இங்கு வந்து, இரண்டு மாவட்டங்களையும் சேர்ந்த அதிகாரிகள், அரசியல் தலைவர்களின் காதுகளில் பூச்சுற்றி விட்டுப் போயிருக்கின்றன.

வெறுங்கை முழம் போட்ட கதையைத் தான் இங்கு செய்து விட்டுக் சென்றிருக்கின்றார்கள். நாமும் ஏமாளிகளாய் அவர்களிடம் எடுபட்டு விட்டோம். என்ன செய்வது...?

–மின்னல்–

## கொரோனா வைரஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேலும் குறிப் பிடப்பட்டுள்ளதாவது:–

பிரதமர் அலுவலகம் மற்றும் அலரி மாளிகையில் பணியாற்றும் எந்தவொரு ஊழியரும் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகவில்லை என்பதை உறுதிபடுத்துகின்றோம்.

கொரோனாத் தொற்று நிலைமை காரணமாக அலரி மாளிகை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது எனத் தேசிய நாளிதழொன்றில் வெளியாகியுள்ள செய்தி உண்மைக்கு புறம்பானதும் ஆதாரமற்றதுமாகும்.

கொரோனா நிலைமைக்கு மத்தியில் அரசு மற்றும் சுகாதாரப் பிரிவினரால் வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய பிரதமர் அலுவலகம் மற்றும் அலரி மாளிகையின் நாளாந்தப் பணிகள் எவ்வித தடையுமின்றி முறையான சுகாதார வழிகாட்டல்களுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பிரதமர் அலுவலகம் மற்றும் அலரி மாளிகையின் பணிகளுக்கென, ஏனைய அரச நிறுவனங்களை போன்று சேவைகளை நிறைவேற்றுவதற்கு அத்தியவசியமான மட்டுப்படுத்தப்பட்ட ஊழியர்களே பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன், பஸில் ராஜபக்ஷ தலைமையில் முன்னெடுக்கப்படும் ஜனாதிபதி செயலணியின் பணிகளும் எவ்வித தடையுமின்றி அலரி மாளிகை வளாகத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பிரதமரின் பாதுகாப்புப் பிரிவுடன் தொடர்புடைய வெளிப்புறப் பிரிவினரே கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புப்பட்டுள்ளனர்.

பிரதமர் அலுவலகம் மற்றும் அலரி மாளிகையில் கடமையில் ஈடுபட்டுள்ள பாதுகாப்புப் பிரிவின் அதிகாரிகள் வழமை போன்று கடமையில் ஈடுபட்டுள்ளனர் என்பதை உறுதிபடுத்துகின்றோம் – என்றுள்ளது.

## தேசியப்பட்டியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேலும், கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் குறித்து நாட்டு மக்கள் எதிர்வரும் ஜனவரி மாதமளவில் அறிந்துக்கொள்ள முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, கட்சியின் பிரதித் தலைவராக ருவான் விஜேவர்தன செயற்பட்டு வரும் நிலையில், கட்சித் தலைமைத்துவத்துக்கு அவர் தெரிவு செய்யப்படுவதில் எந்த எதிர்ப்பும் இருக்காது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார கூறியுள்ளார்.

## எகிறும் சிறைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மொத்த எண்ணிக்கை 652 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் கைதிகள் 609 பேரும், சிறைச்சாலைகள் உத்தியோகத்தர்கள் 42 பேரும் உள்ளடங்குகின்றனர் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## 7 ஆயிரத்துக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அத்துடன், மூன்றாவது அலைமூலம் கம்பஹா மாவட்டத்தில் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கும், களுத்துறை மாவட்டத்தில் 650 இற்கும் மேற்பட்டோருக்கும் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது எனச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

## நினைவேந்தல் உரிமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ராஜபக்ஷ, ஜனாதிபதியாக இருக்கும்வரை, மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வை நடத்துவதற்கு ஒருபோதும் அனுமதி வழங்கப்படமாட்டாது' என ஆளுங்கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மேஜர் பிரதீப் உந்துகொட தெரிவித்திருந்தார். இது தொடர்பில் கருத்துரைக்கும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

போரில் இறந்த தங்கள் உறவுகளைத் தமிழர்கள் அமைதியாக நினைவுகூர உரிமையுண்டு. அதை அரசு சட்டங்கள் கொண்டோ அல்லது மிரட்டல் விடுத்தோ தடுத்து நிறுத்த முடியாது.

கடந்த ஆட்சியில் நினைவேந்தல் உரிமையைத் தமிழர்களுக்கு நாம் வழங்கியிருந்தோம். ஆனால், இந்த ஆட்சியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு அதைத் தட்டிப் பறித்துள்ளது.

தமது உறவுகளை நினைவுகூரும் தமிழர்களுக்குப் புலி முத்திரை குத்தும் அரசின் மோசமான நடவடிக்கையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

நாம் இம்முறை ஆட்சிப்பீடம் ஏறியிருந்தால் நினைவேந்தல் நிகழ்வுகளை அமைதியாகத் தொடர்ந்து நடத்தத் தமிழர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கியிருப்போம்.

தமிழீழ விடுதலைப்புலிகளைத் தாமே அழித்தொழித்தோம் என வீரவசனம் பேசும் அரச தரப்பினர், நினைவேந்தல் நிகழ்வுகளைத் தமிழர்கள் தத்தமது இடங்களில் நடத்துவதால் ஏன் அஞ்சுகின்றனர்?

போரில் இறந்த தங்கள் உறவுகளைத் தமிழர்கள் நினைவுகூருவதால் தமிழீழ விடுதலைப்புலிகள் ஒருபோதும் மீளெழுச்சி பெறமாட்டார்கள்.

எனவே, தமிழர்களின் நினைவேந்தல் உரிமையைத் தடுத்து நிறுத்தி சர்வாதிகாரத்தின் உச்சநிலையைக் காட்ட வேண்டாம் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடமும் அவர் தலைமையிலான அரசிடமும் கேட்டுக்கொள்கின்றேன் – என்றார்.

## 20 ஆயிரத்தைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறித்த அனைவரும் பேலியகொட தொற்றாளர்களுடன் நெருங்கிப் பழகியவர்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் இதுவரை 16 ஆயிரத்து 647 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

இதன்படி மினுவாங்கொட கொத்தணி மூலம் 3 ஆயிரத்து 59 பேருக்கும், பேலியகொடை கொத்தணி மூலம் 13 ஆயிரத்து 588 பேருக்கும் வைரஸ் தொற்றியுள்ளது.

இதையடுத்து மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 20 ஆயிரத்து 162 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 14 ஆயிரத்து 69 பேர் குணமடைந்துள்ளனர். 6 ஆயிரத்து 10 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் 83 பேர் உயிரிழந்துள்ளனர்.

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்துள்ளார் பராக் ஒபாமா.

சோமாலியா போன்ற தோல்வி கண்ட அரசுகளை மீளக்கட்டியமைப்பதற்கோ அல்லது இலங்கை போன்ற நாடுகளில் இன ரீதியான படுகொலைகளைத் தடுப்பதற்கோ ஐ.நாவின் உறுப்பு நாடுகளிடையே வழிமுறைகளோ அன்றி கூட்டு விருப்பமோ இருக்கவில்லை என்று ஒபாமா தனது நூலில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் ‘இனப்படுகொலை’ என்பதை ஒபாமா 'ethnic slaughter' என்ற ஆங்கில வார்த்தையிலேயே குறிப்பிட்டுள்ளார்.

உலக நெருக்கடிகளின்போது ஐக்கிய நாடுகள் சபையின் நடவடிக்கைகள், தீர்மானங்கள் குறித்து விவரிக்கும் அத்தியாயங்களில் இலங்கைத் தமிழர் படுகொலைகளை ஒபாமா சுட்டிக்காட்டியிருப்பது உலக அளவில் பெரும் கவனத்தைப் பெற்றுள்ளது.

தனது பதவிக்காலத்தின் முதல் ஐந்து ஆண்டுகால அனுபவங்களை விவரிக்கும் அவரது நூலின் 768 பக்கங்கள் கொண்ட முதற்பாகம் ஆங்கிலத்திலும் வேறு 24 மொழிகளிலும் அச்சிடப்பட்டு கடந்த செவ்வாயன்று வெளியாகியது.

சமகால உலகத் தலைவர்கள் பற்றிய தனது எண்ணங்கள், தனது பதவிக்காலத்தில் பூகோள அரசியல் குறித்து எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானங்கள், சொந்த வாழ்க்கைப் பின்னணி எனப் பல தகவல்களை பதிவு உள்ளடக்கிய அந்த நூலில், தென்னாசிய அரசியல் மையமான இலங்கை குறித்தும் அதன் இறுதிப் போர் பற்றியும் ஒபாமா என்ன கூறப்போகிறார் என்று நூல் வெளியாகுவதற்கு முன்பிருந்தே பெரும் எதிர்பார்ப்பு நிலவி வந்தது.

இலங்கையில் தமிழ் மக்கள் வகைதொகையின்றிக் கொன்றொழிக்கப்பட்ட இறுதிப் போர்க் காலப்பகுதியில் அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியில் இருந்த ஒபாமா, வன்னியில் பாதுகாப்பு வலயங்களுக்குள் கனரக பீரங்கிகள் மற்றும் எறிகணைத் தாக்குதல்களை த் தவிர்க்குமாறு அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கேட்டிருந்தார்.

இறுதிப் போரை நிறுத்துவதற்கு ஒபாமா தலையிடுவார் என்ற தீவிர எதிர்பார்ப்பு ஈழத் தமிழ் மக்களிடம் மட்டுமன்றி பிராந்திய நாடுகள் மத்தியிலும் காணப்பட்டது.

தற்சமயம் இலங்கை இனப் படுகொலையை ஐ.நாவின் தோல்வி என்று ஒபாமா மதிப்பிட்டிருப்பது ஈழத் தமிழர் படுகொலை விவகாரத்தை மீளவும் சர்வதேச மையப்படுத்தி இருப்பதுடன் இலங்கைப் போர்க்குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் என்ற கோரிக்கைகளுக்கு மேலும் வலுச்சேர்த்திருக்கின்றது என்று அவதானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

## நாள்தோறும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எண்ணிக்கை 87 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 74 பேர் கொரோனாவின் மூன்றாவது அலையில் சிக்கி கடந்த ஒரு மாதத்தில் மட்டும் பலியாகியுள்ளனர்.

## திருவையாறில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சேர்ந்த 169 பேர் தனிமைப்படுத்தப்பட்டமையோடு மேலும் பலரை தேடும் முயற்சியில் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

திருவையாறில் உயிரிழந்த ஒருவரின் மரண நிகழ்வில் பங்குபற்ற கொழும்பு ஆட்டுப்பட்டித் தெருவில் இருந்து வந்த அவரின் மகளிற்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் மரண நிகழ்விற்கு சென்ற அயலவர்கள் மற்றும் உறவினர்களின் வீடுகளைச் சேர்ந்த பலர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

நேற்று இறுதிக் கிரிகைகள் மேற்கொள்ளப்பட்டபோது 7 பேர் மட்டுமே சடலத்தை எடுத்துச் செல்ல சுகாதாரத் தரப்பினர் அனுமதி வழங்கினர்.

இறுதி நிகழ்விற்கு முன்னர் கொழும்பில் இருந்து வந்தவருடன் பழகியவர்களே இவ்வாறு தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேநேரம் கொழும்பில் இருந்து வருகை தந்தவர் கொழும்பில் இருந்து வவுனியா வந்து, வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற தனியார் பஸ்ஸில் கிளிநொச்சி வரை பயணித்துள்ளார். இரணைமடுச் சந்தியில் இறங்கி அங்கிருந்து நீல நிற ஓட்டோவில் திருவையாறில் உள்ள வீடு நோக்கிப் பயணித்துள்ளார். இதனால் நீல நிற ஓட்டோ தேடப்படுகின்றது. யாழ்ப்பாணம் பயணித்த தனியார் பஸ் அடையாளம் காணப்பட்டுள்ளது.

(மற்றொரு செய்தி 12ஆம் பக்கத்தில்...)

# ராஜபக்ஷ குடும்பத்தினர் மனிதாபிமானமுள்ளவர்கள்!

## ஏ.எல்.எம். அதாவுல்லாஹ் புகழாரம்



ராஜபக்ஷ குடும்பம் எப்பொழுதும் மனிதாபிமான முள்ளோர் என்பதோடு மதங்களை மதிப்பவர்கள். கொரோனாவால் மரணிப்போரை எரிக்கும் விடயத்துக்கு விரைவில் தீர்வு கிடைக்கும் என்று நம்புவதாக தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம்.அதாவுல்லாஹ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு - செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரை யாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

எமது வள நிலங்களில் முடியுமான எல்லாவற்றையும் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வடமாகாண விவசாயிகள் தமது உற்பத்திகளை நாடு முழுவதற்கும் ஏற்றுமதி செய்த காலமொன்று இருந்தது.

ஆனால் ஜே.ஆர். அரசு இலங்கையை வெளிநாட்டு குப்பை தொட்டியாக்கியது. எல்லாவற்றையும் இறக்குமதி செய்வதால் நாட்டு மக்கள் சோம்பேறிகளாக மாறுவர். எமது காணிகளை வெளிநாடுகளுக்கு விற்கும் தலைவர்கள் கடந்த காலத்தில் இருந்தனர்.

மேலும் 8 வீதம் இருக்கும் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதை விடுத்து கிடைக்கும் சம்பளத்தில் வாழும் நிலையை ஏற்படுத்த வேண்டும். அன்று 95 ரூபா சம்பளம் வாங்கிய ஆசிரியர் ஒருவருக்கு மாத இறுதியில் மிச்சம் இருந்தது.

ஆனால் ஒவ்வொரு பட்ஜட்டிலும் சம்பள உயர்வு பற்றி தான் பேசுகிறார்கள்.அந்த கலாசாரத்தை மாற்றி, இருக்கும் சம்பளத்தில் வாழும் வகையில் நியாயமான விலையில் பொருள்கள் சந்தையில் இருக்க வேண்டும்.

மரணித்தவர்களின் உடல்களை எரிக்கின்ற ஒரே ஒரு விடயத்தில் தான் குறைபாடு இருக்கிறது. ஆனால் ராஜபக்ஷ குடும்பம் எப்பொழுதும் மனிதாபிமானமுள்ளவர்களாக இருப்பவர்கள். அவர்கள் எல்லோருடைய மதங்களையும் மதிப்பவர்கள்.

அவர்கள் தொடர்பில் நிறைய நம்பிக்கையுள்ளது. நிபுணத்துவ மருத்துவர்கள் மற்றும் மருத்துவர்களும் மதவழிபாடுகளை மதிப்பவர்களாக உள்ளனர். இந்தக் குறை விரைவில் தீரும் என நம்புகிறோம். - என்றார்.

# ஐ.டி.எச். வைத்தியசாலையில் தப்பிச்சென்ற பெண் பிடிபட்டார்!

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் தப்பிசென்ற பெண் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண் இரத்தினபுரி - எஹெலிய கொட பகுதியில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு ஐ.டி.எச். வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த போது தனது இரண்டரை வயது மகனுடன் அந்தப் பெண் இரவு தப்பியோடியிருந்தார்.

இந்நிலையில், பெண்ணைக் கண்டு பிடிக்க புலனாய்வுப் பிரிவினரின் உதவியுடன் விசாரணை மற்றும் தேடுதல் இடம்பெற்று வந்த நிலையில் தற்போது கண்டு பிடிக்கப் பட்டுள்ளார்.

இதேவேளை, குறித்த பெண் மகனுடன் பஸ்ஸில் தனது ஊருக்குச் சென்றுள்ளமையுடன், அங்குள்ள உற வினர் ஒருவர் வீட்டில் மகனை ஒப்படைத்து விட்டு அங்கிருந்து சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வெளிநாடுகளில் சிக்கிய 167 பேர் நாடு மீண்டனர்

கொழும்பு, நவ.23

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக மத்திய கிழக்கிலிருந்து நாடு திரும்ப முடியாது சிக்கித் தவித்த மேலும் 167 இலங்கையர்கள் அரசாங்கத்தின் அனுமதியுடன் நாடு திரும்பியுள்ளனர்.

அதன்படி டுபாயிலிருந்து 68 இலங்கையர்கள் நேற்றுமுன்தினம் இரவு கட்டுநாயக்க, சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அதேபோன்று கட்டாரின், தோஹாவிலிருந்து 42 இலங்கையர்கள் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை 1.45 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அத்துடன் மேலும் 57 இலங்கையர்கள் டுபாயிலிருந்து நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

விமான நிலையத்தை வந்தடைந்த அனைவருக்கும் கொழும்பு நவலோக, லங்கா மற்றும் ஆசிரி தனியார் வைத்தியசாலைகளின் ஊழியர்களால் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து, இலங்கை இராணுவத்தினரால் தனிமைப்படுத்தல் நிலையத்திற்கும் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

# கொரோனா குணமடைவு 14 ஆயிரத்தைக் கடந்தது!

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 479 பேர் பூரண குணமடைந்து வைத்தியசாலைகளில் இருந்து நேற்று (ஞாயிற்றுக்கிழமை) வீடுகளுக்கு திரும்பியுள்ளனர் எனத் தேசிய தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பூரண குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 14 ஆயிரத்து 69 ஆக அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், வைரஸ் தொற்றுக்கு உள்ளான 5 ஆயிரத்து 669 பேர் வைத்தியசாலைகளில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இலங்கையில் இதுவரையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 20 ஆயிரத்தைக் கடந்தது.

மேலும் இந்தத் தொற்றுக்கு உள்ளான 83 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தப்பிச்சென்ற கொரோனா நோயாளி சென்ற இடங்கள் பற்றி விசாரணை!

ஐ.டி.எச். வைத்தியசாலையில் இருந்து தப்பிச் கொரோனா நோய்த் தொற்றுக்கு உள்ளான பெண் சென்றிருந்த இடங்கள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மூன்று தினங்களுக்கு முன்னர் ஐ.டி.எச். வைத்தியசாலையில் இருந்து தமது இரண்டரை வயதான குழந்தையுடன் அந்தப் பெண் தப்பிச் சென்றார்

எஹெலியகொட யாய வீதியில் உள்ள அவரது இல்லத்தில் குழந்தை மாத்திரம் மீட்கப்பட்டமையையடுத்து, இரண்டு தினங்களாக அவரை தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு எஹெலியகொடயில் உள்ள பிரதேச மக்களால் அவர் பிடிக்கப்பட்டு சுகாதார தரப்பினரிடம் கையளிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அவர் கடந்த இரண்டு நாள்களாகச் சென்ற இடங்களின் வழித் தடங்கள் தொடர்பாக ஆராயப்பட்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## தலதா மாளிகையில் கோட்டா



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று முற்பகல் கண்டியில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க தலதா மாளிகைக்கு விஜயம் செய்து புனித தந்தத்தை வழிபட்டு ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டார்.

ராமான்ய மகா நிகாயவின் மகாநாயக்க தேரர் சங்கைக்குரிய நாபான பேமசிறி தேரரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி கண்டிக்கு சென்றுள்ளார். புனித தந்தத்தை வழிபட்ட ஜனாதிபதி, தியவதன நிலமே நிலங்க தேலவுடன் சுமுகமாக கலந்துரையாடினார்.

# அகில இந்திய மகளிர் அணித் தலைவிக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி வாழ்த்து செய்தி!

பாரதிய ஜனதா கட்சியின் அகில இந்திய மகளிர் அணி தலைவியாக பதவிப்பிரமாணம் செய்து கொண்ட வானதி சீனிவாசனிற்கு இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பதில் பொதுச் செயலாளரும் முன்னாள் வட மாகாண சுகாதார அமைச்சருமான வைத்தியர் ப.சத்தியலிங்கம் வாழ்த்துக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்த வாழ்த்துக் கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளதாவது -

தாங்கள் பாரதிய ஜனதாக் கட்சியினுடைய தேசிய மகளிர் அணியினுடைய தலைவியாக நியமனம் பெற்று நேற்றுமுன்தினம் உத்தியோகப்பூர்வமாக பதவிப்பிரமாணம் செய்வதையிட்டு எங்களுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தங்களுடைய இந்நியமனமானது அகில இந்திய அளவிலும் குறிப்பாக தமிழ்நாட்டின் பாரதிய ஜனதாக் கட்சியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் என எண்ணுகிறேன்.

அதேவேளை உலகெங்கும் அடக்கி ஒடுக்கப்படும் பெண்களினதும் குறிப்பாக இந்தியாவில் வாழ்கின்ற பெண்களினது சமூக, பொருளாதார விடுதலைக்கு உந்துசக்தியாக இருக்கும் என நம்புகிறேன்.

தமிழ் மக்கள் தங்களுடைய அரசியல், பொருளாதார, சமூக விடுதலைக்காக முன்னெடுத்த நீண்டகால விடுதலைப் போராட்டத்தில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட தரப்பாக பெண்களே உள்ளனர்.

எமது மக்களுக்கான, குறிப்பாக பாதிக்கப்பட்ட பெண்களுடைய மறுவாழ்விற்கு தங்களது ஆக்கபூர்வமான நடவடிக்கையை எதிர்பார்த்தவர்களாக நாம் உள்ளோம்.

அத்தோடு இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கான நிரந்த தீர்வை நோக்கிய பயணத்துக்குத் தங்களுடைய அனுசரணை நிச்சயமாக இருக்கும் என உறுதியாக நம்புகிறேன்.

தாங்கள் மேன்மேலும் பல பொறுப்புகளை பெற்று மக்களுக்குப் பணி செய்ய வாழ்த்துவதோடு உடல், உள ஆரோக்கியத்துடன் மக்கள் பணி செய்ய வாழ்த்துகிறேன். - எனக் குறிப்பிட்டுள்ளார்.

# ஆசிரியர்களின் கோரிக்கையை அலட்சியம் செய்தது அரசு!

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டு

ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகளை ஆராய்ந்து தீர்வுகாணுமாறு ஆசிரியர்களால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளை அரசாங்கம் அலட்சியம் செய்வதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியிருக்கிறது.

கொவிட் - 19 தொற்றுநோய் பரவுவதற்கு முன்னதாகவே ஆசிரியர்களின் சம்பளத்தை அதிகரிக்குமாறு தொழிற்சங்கங்கள் கேட்டிருந்த போதிலும் அந்த கோரிக்கையை அரசாங்கம் கிடப்பில் போட்டுவிட்டது என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்ராலின் கூறினார்.

2021 பட்ஜட்டில் ஆசிரியர்களின் சம்பளத்தை மீளாய்வு செய்வதாக முன்னைய கல்வியமைச்சர் டலஸ் அழகப்பெருமவும் தற்போதைய கல்வியமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸூம் உறுதியளித்திருந்தார்கள்.

ஆனால் பட்ஜெட்டில் அது கவனத்தில் எடுக்கப்படவேயில்லை என்றும், முன்னாள் அமைச்சர் றிச்சர்ட் பத்திரன 1994 ஆம் ஆண்டில் செய்த விதப்புரைகளின் பிரகாரம் ஆசிரியர்களின் சம்பளங்களை மீளாய்வு செய்து சம்பள முரண்பாடுகளைச் சீர்செய்யுமாறு தாங்கள் கோருவதாகவும் ஸ்ராலின் கூறினார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஊடகங்களும் கொரோனாவும்

**கொரோனா வைரஸ் தொற்றைக் காரணம் காட்டி ஊடகவியலாளர்களுக்கு நாடாளுமன்றக் கதவுகளை அடைத்தமை ஜனநாயகத்துக்கும் நாட்டின் எதிர்காலத்துக்கும் நன்மையாக அமையாது என்று முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார்.**

**ஜனநாயகத்தின் முக்கிய தூணாக ஊடகம் உள்ளது. அத்தகைய நிலையில் நாடாளுமன்றமே ஊடகங்களை ஓரம் கட்டுவது நாட்டின் ஜனநாயகத்துக்கு சாதகமானதல்ல என்று கவலை வெளியிட்டிருக்கின்றார் அவர்.**

**கொரோனாத் தொற்றுப் பரவலை எதிர்கொள்வதற்காக முழு நாடாளுமன்ற செயற்பாடுமே 'சூம்' முறையில் அல்லது இணைய இணைப்பு வாயிலான காணொலி முறையில் முன்னெடுக்கப்படுமானால் அச் சமயத்தில், ஊடகங்களையும், ஊடகவியலாளர்களையும் கூட அந்த முறைமைக்குள் கொண்டு வருவது சரியானதாகும்.**

**ஆனால் நாடாளுமன்றத்தை வழமையாக இயக்கிக் கொண்டு, ஏதோ ஊடகவியலாளர்கள் மூலம் மட்டும்தான் கொரோனாப் பரவும் என்ற மாதிரி அரசும், நாடாளுமன்ற நிர்வாகமும், அரசியல்வாதிகளும் தீர்மானித்துச் செயற்படுகின்றமை பச்சையாகப் பத்தாம்பசலித்தனமாகும்.**

**நாடாளுமன்றத்துக்கு நூற்றுக் கணக்கில் அதன் ஊழியர்கள் வந்து கடமையாற்றிச் செல்கின்றார்கள். பல நாடாளுமன்ற உறுப்பினர்களே சபைக்குள்ளும், நாடாளுமன்றக் கட்டடத் தொகுதிக்குள்ளும் கொரோனாத் தடுப்புத் தொடர்பான சுகாதார விதிமுறைகளை மீறி ஓடித் திரிகின்றனர்.**

**அப்படி இருக்கையில் ஏதோ ஊடகவியலாளர்கள் மூலம் மட்டுமே கொரோனாத் தொற்றும் என்ற பாணியில் அவர்களுக்குத் தடை விதிப்பது அறிவற்ற – விவேகமற்ற – பொறுப்பற்ற – செயலாகும்.**

**அரசமைப்பின் இருபதாவது திருத்த விவாத சமயத்தில், ஒன்றாகக் கடமையில் இருந்த ஐந்து ஊடகவியலாளருக்குப் பின்னர் நடத்திய சோதனையின் போது தொற்று இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது என்பதற்காக, இனிமேல் நாடாளுமன்றத்துக்கு ஊடகவியலாளர்களையே அனுமதிப்பதில்லை என்பது அர்த்தமற்ற நடவடிக்கையாகும்.**

**அப்படிப் பார்த்தால் நாட்டில் பொலிஸாரை ஒட்டியே ஒரு தொற்றுக் கொத்தணியே பரவியுள்ளது. அப்படியானால் இனி நாடாளுமன்றம் பொலிஸ் காவல் இல்லாமலேயே இயங்குமா? ஊடகவியலாளர்களுக்குக் கதவடைப்பு செய்தமை போல பொலிஸாருக்கும் நாடாளுமன்றம் கதவடைப்புச் செய்யுமா என்ற கேள்வி எழுகின்றது.**

**நாடாளுமன்றத்தில் இருந்து ஒளிபரப்பாகும் நாடாளுமன்ற அமர்வு பற்றிய தொலைக்காட்சியைப் பார்த்து செய்திகளை, தகவல்களை வரையும்படி ஊடகவியலாளர்கள் பணிக்கப்படுகின்றமை இன்னும் வேடிக்கையானது.**

**உண்மையில் நாடாளுமன்றத்தில் இடம்பெறும் உரைகளுக்கு அப்பால் பல விடயங்கள், விவகாரங்கள், மக்களுக்குக் கட்டாயம் தெரியப்படுத்தப்பட வேண்டிய அம்சங்கள் நாடாளுமன்றத்தில் அரங்கேறும். அவை எல்லாவற்றையும் நாடாளுமன்ற ஒளிபரப்புப் படம் பிடித்து விவரமாகக் காட்டுவதில்லை.**

**கொரோனா வைரஸ் இன்னும் மூன்று ஆண்டுகளுக்கு நிலை பெற்று நீடித்திருக்கும், அதனுடன் சேர்ந்த வாழப் பழகிக் கொள்ள வேண்டும் என கொவிட் 19 தடை தொடர்பான செயலணிக்குப் பொறுப்பானோர் தெரிவிக்கின்றனர். இதே கருத்தை சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராய்ச்சியும் குறிப்பிட்டுள்ளார்.**

**அப்படியானால், கொரோனாத் தொற்று நீடிக்கக் கூடிய இந்த மூன்று ஆண்டுகளுக்கு தொடர்ந்து நாடாளுமன்றத்தில் ஊடகவியலாளர்களுக்குக் கதவடைப்பு நீடிக்கப் போகின்றதா என்ற கேள்வி எழுகின்றது.**

**இப்படி ஊடகங்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் கதவடைப்புச் செய்தமை மூலம், ஊடக உரிமை, ஜனநாயக உரித்து ஆகியன ஆட்சித் தரப்பினால் சட்ட விரோதமான முறையில் மீறப்பட்டிருக்கின்றன.**

**ஆனால், அது குறித்து ஊடகங்களும், ஊடகவியலாளர்களும், பிரதான எதிர்க்கட்சிகளும் அதிகம் அலட்டிக் கொள்ளாமல் இருக்கின்றமைதான் மிகமிக ஆச்சரியத்துக்குரியது.**

**ஊடக சுதந்திரம் என்று துள்ளிக்குதிக்கும் பல ஊடகங்களும் கூட இந்த விடயத்தில் அதீத மௌனம் சாதிக்கின்றன.**

**இவ் விடயம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறிய அம்சமும் கவனிக்கத்தக்கது.**

***"ஊடகங்களுக்கு நாடாளுமன்றக் கதவுகள் அடைக்கப்பட்டமை முழுத் தவறாகும். தற்போதைய எதிர்க்கட்சி – சஜித் அணி – இதனைப் பேசுவதில்லை. அது கண்டிக்கத்தக்கது"* என்று ரணில் கூயுள்ளார்.**

**நாட்டின் நிறைவேற்றதிகாரம், சட்டவாக்க அதிகாரம் (நாடாளுமன்றம்), நீதித்துறை (நீதிமன்ற) அதிகாரம் என்று மூன்று துறைகள் உள்ளன.**

**இவற்றோடு சமாந்திரமாக ஜனநாயகத்தின் நான்காவது தூணாக ஊடகத்துறை அமைகின்றது.**

**அதன் சுதந்திரத்தில், சுயாதீனத்தில் கைவைப்பதும் கட்டுப்படுத்துவதும் ஊடக சுதந்திரத்தையும், அதன் மூலம் ஜனநாயக விழுமியங்களையும் முற்றாகப் பாதித்துவிடும்.**

**ஆட்சியாளர்கள் – அதிகாரத்தில் இருப்போர் – இது குறித்து மீளாய்வு செய்து சிந்திக்க வேண்டும்.**

# யாழ். பொலிஸ் அதிகாரி அரசியல்வாதியாக கருத்துத் தெரிவித்ததைக் கண்டிக்கின்றேன்

## ராஜபக்ஷக்களின் சகா அங்கஜன் எம்.பி. போர்க்கொடி



முப்பது வருட கால கொடிய போரால் துயருற்ற எமது மக்கள் அக்காலத்தில் கூட உணவு பஞ்சத்தால் உயிர்நீத்த சம்பவம் எதுவும் பதிவாகவில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும் என யாழ். பொலிஸ் அதிகாரி நீதிமன்றத்தில் தெரிவித்த கருத்துக்குக் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளார் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவரும் யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவருமான அங்கஜன் இராமநாதன்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கடந்த காலங்களில் இடம்பெற்ற போர்ச் சூழலில் உயிர்நீத்த தமிழ் உறவுகளுக்கான நினைவேந்தலை தடைசெய்யக் கோரி தொடரப்பட்ட வழக்கில் முன்னிலையாகிய குறித்த பொலிஸ் நிலைய அதிகாரி, தமிழ் மக்களின் உண்ணும் உணவுகளைக் கொச்சைபடுத்தும் முகமாக சோறும், புட்டும், வடையும் சாப்பிட்டுக் கொண்டிருந்த வடக்கு மாகாண மக்களுக்கு பீட்ஸா சாப்பிடும் நிலையை உருவாக்கினோம் என்று கூறியிருந்தார்.

முப்பது வருட கால கொடிய போரால் துயருற்ற எமது மக்கள் அக்காலத்தில் கூட உணவுப் பஞ்சத்தால் உயிர்நீத்த சம்பவம் எதுவும் பதிவாகவில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். பொலிஸ் துறையில் உயர் பதவியில் இருப்போர் இன ஐக்கியத்தைக் குழப்புவதும் மற்றும் தமிழ் மக்களின் மனதைப் புண்படுத்தும் வகையில் கருத்துக் கூறுவதையும் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

கடந்த காலங்களில் தமிழ் மக்களைத் தேர்தலின்போது உசுப்பேத்தி அரசியல் சுயலாபம் தேடுகின்ற அரசியல்வாதிகளுக்கு இவ்வாறான கருத்துக்கள் எதிர்வரும் காலங்களில் மக்களை ஏமாற்றுவதற்குப் பக்கபலமாக அமைந்து விடும் – என்றார்.

# முதல் 10 எம். பிக்களில் இடம் பிடித்த ஒரேயொரு மலையகத் தமிழ் எம். பி.

நாடாளுமன்றத்தில் ஒக்டோபர் மாதம் சிறப்பாகச் செயற்பட்ட 10 நாடாளுமன்ற உறுப்பினர்களுள் மலையகத்தைச் சேர்ந்த தமிழ் எம்.பி. ஒருவரும் இடம்பிடித்துள்ளார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலு குமாரே 7 ஆவது இடத்தில் உள்ளார்.

நாடாளுமன்றம் வருகை, விவாதங்களில் பங்கேற்பு உள்ளிட்ட விடயங்களை அடிப்படையாகக்கொண்டே manthri.lk என்ற இணையத்தால் குறித்த பட்டியல் தயாரிக்கப்படுகின்றது.

முதல் பத்து இடங்களைப் பிடித்த எம்.பிக்கள் விபரம் வருமாறு:–

1. **அநுரகுமார திஸாநாயக்க**
2. **அஜித் நிவாட் கப்ரால்**
3. **சஜித் பிரேமதாஸ**
4. **ஹர் டி சில்வா**
5. **மஹிந்தானந்த அளுத்கமகே**
6. **பந்துல குணவர்தன**
7. **வேலு குமார்**
8. **புத்திக்க பத்திரண**
9. **எஸ்.சேமசிங்க**
10. **எஸ்.எம். மரிக்கார்**

# சேலைன் குழாயில் கழுத்து இறுகி சிறுவன் ஒருவன் பரிதாபமாக சாவு!

## புத்தளத்தில் சம்பவம்

புத்தளம் புதிய எலுவன்குளம் பிரதேசத்தில் மரத்தில் கட்டப்பட்டிருந்த சேலைன் குழாயில் கழுத்து இறுகிய நிலையில் சிறுவன் ஒருவன் பரிதாகமாக உயிரிழந்துள்ள சம்பவம் ஒன்று நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பதிவாகியுள்ளதாக புத்தளம் மற்றும் கற்பிட்டி பகுதிகளுக்கு பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி பதுர்தீன் முஹம்மது ஹிஸாம் தெரிவித்தார்.

குறித்த பிரதேசத்தை சேர்ந்த 09 வயது சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

சம்பவம் இடம்பெற்ற சனிக்கிழமை நண்பகல் வேளை, குறித்த சிறுவன் மதிய உணவு உட்கொண்ட பின்னர் விளையாடுவதற்காக வீட்டுக்கு வெளியே வந்துள்ளார்.

இதன்போது சிறுவனின் தாய் தனது இரண்டாவது மகனுக்கு மதிய நேர உணவைக் கொடுத்துவிட்டு வீட்டுக்கு வெளியே வந்து பார்த்த போது தனது மூத்த மகன் வீட்டு வளவுக்குள் உள்ள கொய்யா மரத்தில் கட்டப்பட்டிருந்த சேலைன் குழாயில் கழுத்து இறுகி தொங்கிய நிலையில் காணப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, அதிர்ச்சியடைந்ததாயின் அழுகுரலைக் கேட்ட அயலவர்கள் அங்கு வருகை தந்து, மரத்தில் தொங்கிய நிலையில் காணப்பட்ட சிறுவனை உடனடியாகப் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

எனினும், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது சிறுவன் உயிரிழந்துள்ளான்.

இந்நிலையில், சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டமையையடுத்து, மரணம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

இதனையடுத்து வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்ட சடலம் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

பிரேத பரிசோதனையில் மேற்படி சிறுவன் கழுத்து இறுகியமையால் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சிறுவனின் சடலம் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகப் புத்தளம் மற்றும் கற்பிட்டி பகுதிகளுக்கு பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி பதுர்தீன் முஹம்மது ஹிஸாம் மேலும் தெரிவித்தார்.

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை - 2020
'உலகில் உள்ள கானகங்களுக்கு நாம் இழைத்திடும் கொடும் செயல்கள் நாம் நமக்குள் ஒருவருக்கொருவர் இழைத்திடும் கொடும் செயலகளின் பிரதிபலிப்பே.'
- மகாத்மா காந்தி (இந்திய தேசபிதா)

# தமிழர் மீதான அடக்குமுறைகளை அரசு நிறுத்திக்கொள்ளவேண்டும்!

## செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை



ஐக்கிய இலங்கைக்குள்ளே ஒருதீர்வை எதிர்பார்க்கின்றோம். அதன் பிரகாரம் வாழ்வதற்கான முயற்சியை நாங்கள் மேற்கொள்கின்றோம். ஆனால் அடக்குமுறைகளால் தொடர்ந்து அடக்கப்படுகின்றபோது அதனை உடைத்தெறிவதற்கான சந்தர்ப்பத்தை நாங்கள் தவிர்க்க முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு - செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் அதில் உயிரிழந்தவர்களை நினைவு கூருவது தடைப்படும் அவலநிலை நாட்டில் காணப்படுகிறது. ஜே.வி.பியை எடுத்துப்பாருங்கள், அவர்கள் போராட்ட இயக்கமாக இருந்தார்கள். ஆயுதப்போராட்டத்தை கைவிட்டு அவர்கள் அரசியல் நீரோட்டத்தில் இணைந்துள்ளனர். அவர்கள் அவர்களது போராட்டத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூருகின்றனர். எனினும் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகள் தொடர்ந்தும் காணப்படுகின்றன.

ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தவர்களை நினைவு கூருவதற்கு ஏன் தடையாக இருக்கின்றீர்கள் எனக் கேட்க விரும்புகின்றேன். அடக்குமுறைகளும் தடைகளுமே ஆயுதப் போராட்டத்துக்கு எமது இளைஞர்களை அன்று தூண்டியிருந்தன. எந்த எதிர்பார்ப்புக்களும் இல்லாமல் தனது சமூகத்துக்காகப் போராடி உயிர் நீர்த்த அந்த போராளிகளை இந்த சபையிலேயே நினைவு கூருவதையிட்டு நான் பெருமிதடைகின்றேன்.

வடக்கு, கிழக்கில் கடற்றொழில் மற்றும் விவசாயம் என்பன மக்களின் வாழ்வாதாரத் தொழில்களாகக் காணப்படுகின்றன. விவசாயத்தை எடுத்துக் கொண்டால் இந்த வரவு - செலவுத் திட்டத்தில் விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு வரிச் சலுகை கொடுக்கப்படும் எனக் கூறப்பட்டுள்ள போதும், தமிழர்களின் பூர்வீக நிலங்கள் பறிக்கப்படும் சந்தர்ப்பங்களே காணப்படுகின்றன.

விவசாய உற்பத்திகளை வரியில்லாது நீக்க வேண்டுமாயின் எங்கள் மக்களுக்கு விவசாயம் செய்ய நிலம் வேண்டும். அந்த நிலத்தை வனத் திணைக்களம் அபகரித்துக்கொண்டிருக்கிறது. விவசாயிகளுக்கு கால்நடை என்பதும் பிரதான விடயமாகும். கால்நடைக்கான மேய்ச்சல் தரைகள் பாரிய பிரச்சினைகளாகக் காணப்படுகின்றன. கால்நடைகளை மேய்ப்பதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்படவில்லை.

இவ்வாறான சூழ்நிலை இருக்கும் போது விவசாய உற்பத்திகள் மேம்படுத்தப்படும் எனக் கூறப்படுவது எப்படி நியாயமாகவிருக்கும்? நிலம் அபகரிக்கப்படும் போதுதான் ஆயுதப் போராட்டம் ஆரம்பமானது. இந்த நிலைமைக்கு அரசை மீண்டும் அனுமதிக்கக் கூடாது. விவசாயிகளின் காணிகள் வனபரிபாலனத் திணைக்களத்திடமிருந்து விடுவிக்கப்பட வேண்டும்.

வடக்கு, கிழக்கில் உள்ள சகல விவசாயிகளும் கடனாளிகளாகவும், ஏழைகளாகவும் காணப்படுகின்றனர். நெல்லுக்கு நியாய விலையை வழங்கி உரிய விலையை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என அவர் இதன்போது தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# நுவரெலியாவில் மேலும் மூவருக்குக் கொரோனா 50 இற்கும் மேற்பட்ட குடும்பம் தனிமைப்படுத்தல்!

நுவரெலியாவில் மேலும் மூவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

லிந்துலை - லிப்பகலை, அக்கரப்பத்தனை மற்றும் பூண்டுலோயா ஆகிய பகுதிகளிலுள்ள மூவருக்கே நேற்றுமுன்தினம் (சனிக்கிழமை) கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், இவர்கள் மூவரும் சுகாதார பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் அம்பாந்தோட்டையில் அமைந்துள்ள கொரோனா வைரஸ் தடுப்பு சிகிச்சை நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், இவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் சுய தனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

லிந்துலை லிப்பகல தோட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கானவர், தலவாக்கலை - சென்கிளயார் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை வைரஸ் தொற்றாளராக அடையாளம் காணப்பட்ட பெண்ணின் கணவராவார்.

கடந்த 16 ஆம் திகதி கொழும்பு - தெமட்டகொடை பகுதியில் இருந்து வந்து தோட்டத்தில் உள்ள தனது வீட்டில் இவர் இரகசியமாக தங்கியுள்ளார்.

எனினும், இவர் தொடர்பில் பொலிஸார் மற்றும் சுகாதார பிரிவினருக்கு தகவல் கிடைத்தமையையடுத்து பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார். பரிசோதனை முடிவில் அவருக்கு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், அக்கரப்பத்தனை பெல்மோர் தோட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளவர், கொழும்பு 12 பகுதியில் இருந்து வந்துள்ளார். இதனால் அவரிடம் பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டன. பரிசோதனை முடிவுகள் வெளியான நிலையில் வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, கொழும்பில் கூலித்தொழிலாளியாக வேலைசெய்த 25 வயதுடைய இளைஞர் ஒருவர் பூண்டுலோயா சீன் தோட்டத்திலுள்ள தனது வீட்டுக்கு கடந்த 16 ஆம் திகதி வந்துள்ளார். பி.சி.ஆர்.பரிசோதனை மூலம் அவருக்கு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர் பல இடங்களுக்கு சென்று வந்துள்ளார் என்பதை பொலிஸார் கண்டறிந்துள்ளனர்.

எனவே, அவருடன் தொடர்பில் இருந்த 50 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தற்போது சுய தனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

# நாடாளுமன்றப் பேரவை இன்று சபாநாயகர் தலைமையில் கூடும்

நாடாளுமன்ற பேரவை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் இன்று (திங்கட்கிழமை) மாலை 4 மணிக்கு நாடாளுமன்றத்தில் கூடவுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின் வெற்றிடங்களுக்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் மேற்கொள்ளப்பட்டுள்ள பரிந்துரைகள் மற்றும் பொலிஸ்மா அதிபர் பதவிக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நியமனம் என்பன தொடர்பாக இதன்போது பரிசீலிக்கப்படவுள்ளன.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹஷீம் ஆகியோர் நாடாளுமன்ற பேரவையில் அங்கம் வகிக்கின்றனர்.

நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க அதன் செயலாளராக பதவி வகிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# குருநாகல் பிரதான தபாலக ஊழியர் 14 பேருக்கு தொற்று!

குருநாகல் பிரதான தபால் நிலைய ஊழியர்கள் 14 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

குறித்த தபால் நிலையத்தில் பணியாற்றிய 60 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையின் முடிவுகள் தற்போது வெளியாகியுள்ளன. அதிலேயே மேற்படி 14 பேருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்களில் 7 உயரதிகாரிகளும் உள்ளடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# போலி நாணயத் தாள்கள் வைத்திருந்த இருவர் திருமலையில் விளக்கமறியலில்!

திருகோணமலை மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 41 ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்களை வைத்திருந்த இருவரை இம்மாதம் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக் குமாறு மூதூர் நீதிமன்ற பதில் நீதிவான் முகம்மட் மஹ்ரூப் நேற்று சனிக்கிழமை உத்தரவிட்டார்.

கந்தளாய், பேராறு பகுதியைச் சேர்ந்த 29 மற்றும் 27 வயதுடைய இருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் மூதூர் பெரிய பாலம் பகுதியில் அமைந்துள்ள உணவு விடுதியொன்றில் வைத்து மூதூர் குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு கைது செய்துள்ளனர் என மூதூர் குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களிடம் இருந்து ஐந்தாயிரம் ரூபா போலி நாணயத்தாள்கள் ஏழும், ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்கள் ஐந்தும், ஐந்நூறு ரூபா போலி நாணயத்தாள்கள் இரண்டும் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன் சந்தேக நபர்கள் பயன்படுத்திய கணினி, தொலைநகல், அச்சு பதிப்பு இயந்திரங்களையும் கைப்பற்றியுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை மூதூர் நீதிமன்ற பதில் நீதிவான் முன்னிலையில் பொலிஸார் நேற்று ஆஜர்படுத்திய போது நீதிபதி விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாடசாலை இன்று ஆரம்பம் மாணவர்க்கான அறிவிப்பு

மேல் மாகாணம் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களைத் தவிர அனைத்து பகுதிகளிலும் மூன்றாம் தவணைக்காக பாடசாலைகளை இன்று (திங்கட்கிழமை) திறப்பதற்கு அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

அதற்கமைய, ஆறாம் வகுப்பு முதல் 13 ஆம் வகுப்பு வரை பாடசாலைகள் ஆரம்பமாகவுள்ளன.

இந்த நிலையில், சுகாதார விதிமுறைமைகள் பின்பற்றப்பட்டு கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று தொற்று நோயியல் பிரிவின் தலைமை நிபுணர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

எனினும் மாணவர் அல்லது பாடசாலை பணிக்குழாமில் எவரேனுக்கும் கொவிட் 19 தொற்றுக்கான நோய் அறிகுறிகள் காணப்பட்டால் பாடசாலைக்கு சமுகமளிக்காமல் இருக்கவேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேநேரம், பாடாசலைக்கு சமுகமளித்த எவருக்கேனும் நோய் அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக ஏனையவர்களுடன் விலகிச் சென்று தேவையான மருத்துவ சிகிச்சை பெறுவதற்கு அல்லது ஓய்வைப் பெற வீடுகளுக்குச் செல்ல வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் பாடசாலைக்குவ் செல்லும் போதும் வெளியேறும் போதும் பாடசாலை நுழைவாயிலுக்கு அருகில் நெரிசல் நிலை ஏற்படாத வகையில் இருக்க வேண்டும் எனவும் தொற்று நோயியல் பிரிவின் தலைமை நிபுணர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

வீட்டில் இருந்து வெளியேறும் போதும் பாடசாலைகளுக்கு உள்நுழையும் போதும் கைகளை நன்றாகச் சுத்தம் செய்ய வேண்டும் என்பதோடு முகக்கவசம் கட்டாயம் அணிந்திருக்க வேண்டும் என தொற்று நோயியல் பிரிவின் தலைமை நிபுணர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir



பாபா பிறந்த தினம் இன்று. அதையொட்டி இக்கட்டுரைகள் வெளியிடப்படுகின்றன.

# பாபா இன்னும் வாழ்கிறார்!

எஸ்.டி.எஸ். உதயநாயகம்
(பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையம், கொழும்பு)

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா இன்றும், இன்னமும், வாழ்ந்து கொண்டுதானிருக்கிறார். இன்று, நவம்பர் 23 ஆம் திகதி, திங்கள் கிழமை அவரது 95 ஆவது ஜெனனதினம். உலகில் வாழும் கோடிக் கணக்கான சாயி பக்தர்களுக்கு அவர் சாட்சாத் தெய்வமே! அவரிடத்தில் உலகிலுள்ள பக்தர்கள், இன்றும் ஆன்மீகத் தொடர்புடன்தான் இருக்கிறார்கள். அவரும் பல லீலைகளைச் செய்துகொண்டுதான் இருக்கிறார்.

கொடிய நோயின் தாக்கம், உலகமெங்கும் பரவியுள்ளது. பயம் ஒரு பக்கம் வாட்டுகிறது. பொருளாதாரம் மறுபக்கம் தாக்குகிறது. இன்று எதையோ இழந்த உணர்வில் பல பக்தர்கள் இருக்கின்றனர். ஆனால் பாபா எம்முடன்தான் இருக்கிறார் என்பதை, பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா நமக்கு விட்டுச் சென்ற, பாரம்பரியத்தை புரிந்துகொண்டால், நாம் உணர முடியும். அதனால், சோர்வடைந்த நமது மனதுக்கு முழுத்தெளிவு கிடைக்கும்.

அந்த பாரம்பரியத்தில் ஒன்று அன்பாகும். சாயி அவதாரத்தின் தோற்றம் அன்பின் வடிவம். அவர் சாயி பக்தர்களின் இதயங்களில் அன்பின் ஒளியையேற்றினார். அன்றாட வாழ்க்கையில் அந்த ஒளியானது, மற்றவர்களுடன் பரிமாறிக்கொள்ளத் தூண்டியது. சாயி சமுதாயத்தில் மாற்றம் ஏற்படச் செய்தது. லட்சக்கணக்கானவர்கள் பாபாவின் அன்பினால் உந்தப்பட்டதனால், உலகளாவிய நிலையில் செயல்படும் அன்பாக அது ஆகியுள்ளது. அன்புதான் பகவானின் மிகப்பெரிய அருட்கொடையாகும். அவரது பாரம்பரியத்தின் மிக முக்கியமானது சேவை மனப்பான்மை. சாயி சேவை ஒரு தன்னலமற்ற, பக்தியுடன்கூடிய சேவை. இந்த சேவ. புரிவதற்குத் தேவை சாயி நிறுவனங்கள். சாயி நிறுவனம் என்பது யாவருமே தமது ஆன்மீகச் சாதனைகளைச் செய்ய ஏதுவான கருவியாகப் பயன்படும் பொருட்டுப் பகவானால் ஏற்படுத்தப்பட்டது.

பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தங்களது பதவி, அந்தஸ்து, கௌரவம் என்று பாராது, தாமே முன்வந்து, அன்போடும் பக்தியோடும் பல இடங்களில், பகவானின் மானவ சேவையே மாதவ சேவை என்ற உபதேசத்தால் உந்தப்பட்டுப் பணிசெய்து வருகின்றனர்.

பாபாவால் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள், மருத்துவபீடங்கள், கல்விக்கூடங்கள், ஏனைய நிறுவனங்கள் அனைத்தும் பாபாவின் அறக்கட்டளைகளால் இயங்கி வருகின்றன. அவர் மிகுந்த தொலைநோக்கோடு, தமது நிறுவனங்கள் செயல்படப் போதிய வைப்பு நிதியை அரசு வங்கிகளில் வைத்து, அதன் மூலம் வரும் வருவாயில் இந்த நிறுவனங்கள் மேலும் வளர்ச்சியடைவது மட்டுமல்ல, எவரது உதவியையும் எதிர்பாராது இயங்கக் கூடிய வல்லமையையும் ஏற்படுத்திவைத்துள்ளார். பாபா விட்டுச்சென்ற பாரம்பரியத்தில் பொருளியல் ரீதியானவை இவை.

மனிதமேம்பாட்டுக் கல்வி முறையை அறிமுகப்படுத்தியவர் பாபாவேதான். பலபேர் மனித உயர் பண்புகளை ஆதாரமாகக் கொண்டு கல்வித்திட்டங்களை பேசியிருக்கலாம். ஆனால் நடைமுறைப்படுத்திய பெருமை பாபாவைத்தான் சேரும். சாயி பல்கலைக்கழங்களில் அமல் படுத்தப்பட்டுள்ள ஒருங்கிணைந்த கல்வி உரம்

பாய்ந்தது. பாபாவின் கல்வி திட்டம் வாழ்வதற்கானது, சம்பாதிப்பதற்கானதல்ல. இந்தக் கல்வி பாரம்பரியம், பகவான் மனிதகுலத்தின் எதிர்காலத்திற்காகக் கொடுத்த அருட்கொடையாகும். இந்தப் பாரம்பரியங்கள் இருக்கும்வரை பாபா வாழ்ந்து கொண்டுதான் இருப்பார். வருடா வருடம் அவரது பிறந்தநாள் வரத்தான் செய்யும். இன்றைய காலகட்டத்தில், பாபாவின் பிறந்த நாளை வெகு சிறப்பாக கொண்டாட முடியாத சூழ்நிலை. அவரது 95ஆவது பிறந்த நாள் பிரார்த்தனையாக, அந்த கொடிய நோய் கொரோனா, உலகிலிருந்து விடைபெற வேண்டும் என்று பிராத்திப்போமாக. சாயி பக்தர்கள் தங்களது வீடுகளிலிருந்து வழிபடவேண்டிய ஒரு கட்டாயம். பாபா இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்ற நம்பிக்கையுடன், சாயி நாமத்தை உச்சரிக்கும்போது, அவரது ஆசி அனைவரையும் வந்தடையும். கொழும்பு புதுச்செட்டித்தெருவிலுள்ள சாயி நிலையத்தில், ஆராத்தியுடன் பூஜைகள் அமைதியாக, அனைத்து சாயி பக்தர்களின் பூரண நலங்களுக்காக இடம்பெறும்.

# சாயி வந்தனன் வாழ்வு தந்தனன்!

(வே.வரதசுந்தரம்)



பாபா பிறந்த தினமாம் இன்று சாயி அடியார்கள் ‘சாயி வந்தனன்! வாழ்வு தந்தனன்’ என்று பாடிப்பாடித் துள்ளிக் குதிப்பர். இது வெறும் சம்பிரதாயமோ ஆர்ப்பரிப்போ அன்று. அவர்கள் உணர்ந்த யதார்த்தத்தின், அநுபவத்தின் வெளிப்பாடு.

பாபாவின் பிறந்த நாளன்று பாரெங்கும் அடியார்கள் நகரசங்கீர்த்தனத்தில், பஜனைகளில், பாபா தேர்ப்பவனி, ஆரத்தி, இவையெல்லாவற்றுக்கும் மேலாக சேவை முகாம்கள் என்பவற்றில் பயபக்தியுடன் கூட்டாக ஈடுபடுவர். ஆனால் இவ்வாண்டு அவர்கள் கொரோனா பீதி காரணமாக அவற்றைத் தவிர்த்துத் தத்தம் வீடுகளில் தனித்தனியாக இவற்றில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

பாபா அவதார மகிமையினால் ஒரு குக்கிராமம் ஈஸ்வரமான கதை இது. புட்டபர்த்தி ஈஸ்வரமான அற்புதம் இது. அதிருத்ர யாகம் நடாத்திய மகானின் கதை



யிது. சிவலிங்க வழிபாட்டின் மகிமையை உலகு அறியச் செய்த மகானின் கதையிது. எல்லாவற்றுக்கும் மேலாக திருநீற்றின் ஆன்மீக சக்தியை அனைத்துலக மக்களுக்கும் உணர்த்திய பெருமகான் பகவான் பாபாவின் கதையிது.

‘மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா’ எனப் பாடினார் கவிமணி. அப்படியானால் ஓர்அவதாரத்திற்கு அன்னையாக ஈஸ்வராம்மா எத்துணை தவம் செய்திருக்க வேண்டும்! எத்தனை பிறப்புக்களில் தவம் இயற்றி இருக்கவேண்டும்!

இராமருக்குத் தாயாராக கௌசல்யா அமைந்ததுபோல், கிருஷ்ணருக்கு அன்னையாகத் தேவகி அமைந்ததுபோல், எங்கள் சாயீஸ்வரனுக்கு அன்னையாகும் பாக்கியத்தை ஈஸ்வராம்மா பெற்றார். மனிதர்கள் தமது அன்னைகளைத் தாமே தெரிவு செய்வதில்லை. ஆனால் சாயி ஈஸ்வரன் அவதாரம் எடுத்தபோது தனது அன்னையைத் தானே தேர்ந்தெடுத்தார்.

**இராமருக்குத் தாயாராக கௌசல்யா அமைந்தது போல், கிருஷ்ணருக்கு அன்னையாகத் தேவகி அமைந்ததுபோல், எங்கள் சாயீஸ்வரனுக்கு அன்னையாகும் பாக்கியத்தை ஈஸ்வராம்மா பெற்றார்.**

ஈஸ்வராம்மா தனது எட்டாவது குழந்தையை வயிற்றில் சுமந்தபோது அவளது வீட்டில் மங்கள ஓசை கேட்டது. அங்கு மிருதங்கம், தம்புரா போன்ற இசைக் கருவிகள் இனிய ஓசை எழுப்பின. இதை அறிந்த சோதிடர்கள், புரோகிதர்கள் இவ்வீட்டில் ஓர் அவதாரம் தோன்றப் போகின்றது என்றார்கள். அக்ஷய வருடம் கார்த்திகை மாதம் திங்கட்கிழமை சிவ பெருமானுக்கு உகந்த சோமவாரத்தில் திருவாதிரை நட்சத்திரத்தில் ஒரு மகவு பிறந்தது. அன்றையதினம் 1926 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 23 ஆம் திகதி.

அதுவோ அழகிய ஆண்மகவு. அக்குழந்தையின் இடது கன்னத்தில் இருந்த கருமையான மச்சத்தைக் கண்டதும், பெற்றோரும் மற்றோரும் அது சிவனார் சடையில் திகழும் பிறையோ என்று வியந்தனர். அக்குழந்தையின் மார்பில் உள்ள மச்சத்தைக் கண்டதும் நாராயணன் திருமார்பில் திகழும் வத்ஸம் என்ற அணிகலனோ என்று வியந்தனர். பாதங்களின் அடியில் சங்கையும் சக்கரத்தையும் கண்டவர்கள் அவை தெய்வீக அம்சங்கள் என்று பயபக்தி மிக்கவர்களானார்கள். பனை ஓலைப் படுக்கையில் குழந்தையைக் கிடத்தியதும் படுக்கைக்கு அடியில் ஒரு நாகம் அசைந்து நெளிந்தது. பின்னர் அது காணாமல் போயிற்று. மகாவிஷ்ணுவின் படுக்கையாகப் பணியாற்றிய ஆதிசேடன் இதுவே என்று தெளிவுபெற்றனர்.

ஈஸ்வராம்மா கருவுற்ற அற்புதத்தைப் பாருங்கள், கிணற்றில் நீர் அள்ளிக் கொண்டு இருக்கின்றார். வானில் இருந்து ஒரு நீலவண்ண ஒளிப்பந்து சுழன்று, சுழன்று வந்து அவர் உடலில் புகுந்து விடுகின்றது.

(11 ஆம் பக்கம் பார்க்க...)



ந.லோகதயாளன்

# தினசரி வருமானத்தை இழந்து அவலத்தில் வடக்கு மீனவர்கள்

இலங்கையின் மொத்தக் கடற்கரையோரத்தின் மூன்றில் ஒரு பகுதிக்கும் அதிக கடல் கரைப் பிரதேசம் வட மாகாணத்தில் காணப்படும் நிலையில், கொரோனா காரணமாக தமது கடற்கலங்களைக் கரையிலேயே நிறுத்தி வைக்கும் அவலத்திற்கு வடக்கு மாகாண மீனவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். இது தொடர்பில் அரசு உரிய கவனம் செலுத்தவில்லை என மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இலங்கையின் மொத்தக் கடற் கரையோரத்தின் நீளம் 1,760 கிலோ மீற்றர் ஆகும். இதில் வடக்கு மாகாணத்தில் மட்டும் 656 கிலோ மீற்றர் நீளக் கடற்கரையோரம் உள்ளது. இதில் அதிக பட்சமாக யாழ்ப்பாணம்




மாவட்டத்தில் 292 கி.மீற்றர் நீள கடற்கரையோரம் உள்ளதோடு, மன்னாரில் 163 கி.மீற்றரும், கிளிநொச்சியில் 125 கி.மீற்றரும், முல்லைத்தீவில் 76 கி.மீற்றருமாக வடக்கு மாகாணத்தில் 656 கி.மீற்றர் நீளக் கடலோரம் உள்ளது.

இந்த மாகாணத்தின் 4 கடல் மாவட்டங்களில் மட்டும் 35 ஆயிரம் குடும்பங்கள் கடற்றொழிலை நம்பி வாழ்கின்றன.

**யாழ்ப்பாணத்தில்**

அதாவது யாழ்ப்பாணத்தில் 21 ஆயிரம் குடும்பங்கள் கடற்றொழிலை நம்பியுள்ளன.

யாழ் மாவட்டத்தில் கடந்த வருடம் ஒக்டோபரில் 44 லட்சத்து 31 ஆயிரத்து 96 கிலோ கடலுணவு உற்பத்தி கிடைத்துள்ளது. ஆனால், 2020 இல் இதே ஒக்டோபர் மாதத்தில் உற்பத்தி ஆக 25 லட்சத்து 10 ஆயிரத்து 244 கிலோ மட்டுமே கிடைக்கப்பட்டுள்ளது.

**மன்னாரில்**

மன்னாரில் 7 ஆயிரத்து 500 குடும்பங்கள். 4,835 கடற்கலங்கள் மற்றும் 115 கரை வலைகள் மூலம் தினமும் ஒரு லட்சத்து 50 ஆயிரம் கிலோ வரையில் கடல் உற்பத்தியைப் பெற்று வந்தன. இருந்த போதும் தற்போது அது 60 ஆயிரம் கிலோவைத் தாண்ட முடியவில்லை. தினமும் 30 இற்கும் மேற்பட்ட வாகனங்களில் ஏற்றுமதி செய்யப்பட்ட கடல் உற்பத்தி தற்போது 6 அல்லது 7 வாகனங்களிலேயே செல்வதாகவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

**முல்லைத்தீவில்**

முல்லைத்தீவில் 3,987 குடும்பங்களிடம் 1,340 படகுகள் மற்றும் கரை வலை என தினமும் 50 ஆயிரம் முதல் 60 ஆயிரம் கிலோ உற்பத்தி பெறப்பட்டபோதும் தற்போது 25 ஆயிரம் கிலோவைக் கூடப் பெறமுடியவில்லை எனவும், முன்னர் தினந்தோறும் இரு வாகனங்கள் கொழும்புக்கு கடல் உற்பதியோடு சென்றமையோடு, தற்போது செல்வதே கிடையாது எனவும் மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

**கிளிநொச்சியில்**

கிளிநொச்சியில் 3 ஆயிரத்து 500 வரையான குடும்பங்கள் பாதிப்புற்றுள்ளன.

இந்த வகையில் 35 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன.

இவ்வாறு வாழும் இந்த 35 ஆயிரம் மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரம் கடந்த 6 மாதங்களாகக் குறைவடைந்து செல்வதோடு இரு மாதங்களாக அதிக பாதிப்படைந்துள்ளது.

அதாவது, கொரோனா காரணமாக தலைநகர் முடக்கம். அதனால் ஏற்றுமதி கிடையாது. போதாக் குறைக்கு மாகாணங்களிற்கு இடையேயான போக்குவரத்து அச்சம் பின்னடைவுக்குப் பிரதான காரணமாகக் கூறப்படுகின்றது.

இவ்வாறு மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில்

வடமராட்சி மீனவர் சங்கங்களின் சமாசத் தலைவர் நா.வர்ணகுலசிங்கம் கருத்து தெரிவிக்கையில் –

வடமராட்சி சமாசத்தின் கீழ் 14 சங்கங்களைச் சேர்ந்த 3,732 மீனவக் குடும்பங்கள் கடல் தொழிலை நம்பியே வாழ்கின்றன. இவர்களின் வாழ்வாதாரத்திற்காக 2,500ற்கும் மேற்பட்ட படகுகள் உள்ளன. இவற்றின் மூலம் கொரோனாத் தாக்கத்திற்கு முன்பு நாள் ஒன்றிற்கு 7 ஆயிரம் கிலோ வரையான மீன் உற்பத்தி பெறப்பட்டது. அதேநேரம் 7 அல்லது 8 கூலர் மீன் தெற்கிற்கு எடுத்துச் செல்லப்பட்டு ஏற்றுமதியும் இடம்பெற்றது. இதனால் ஓரளவு தடையற்ற வருமானத்தை தொழிலாளர்கள் பெற்றனர்.

ஆனால் தற்போது கொரோனா அச்சம் காரணமாக ஏற்றுமதி இல்லை. அதனால் போதிய சந்தை வாய்ப்பு இன்மையால் தொழிலாளர்கள் கடலிற்கு செல்வதில்லை. இதனால் நாள் ஒன்றிற்கு ஆயிரம் கிலோ உற்பத்தியளவிலேயே கிடைக்கும் சந்தர்ப்பத்திலும் 800 ரூபா விற்ற மீனை 300 ரூபாவிற்கும் சந்தைப்படுத்த முடியவில்லை. இதன் காரணமாக படகுகளில் தினக் கூலிக்கு சென்ற மீனவர்கள் மேசன் வேலைக்கும், றோட்டு வேலைக்கும் செல்லும் அவலம் ஏற்பட்டுள்ளது. – என்றார்.

இதே விடயத்தினையே வட மாகாண சுதந்திர கடற்றொழிலாளர் மையத்தின் தலைவர் தவச்செல்வனும் வலியுறுத்தியோடு இந்திய மீனவர்களின் ஊடுருவலும் இவற்றிற்கு காரணம் என்றார்.



இலங்கையில் இருந்து 74 நிறுவனங்கள் கடல் உற்பத்தியை ஏற்றுமதி செய்தாலும் இதில் ஒருவர் மட்டுமே தமிழராகவும் உள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# வருமானம் திரட்டும் முறை 2021 பாதீட்டில் இல்லை!

## குற்றஞ்சாட்டுகிறது ஐ.தே.க.

2021 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்குத் தேவையான வருவாயைத் திரட்டும் முறையைக் குறிப்பிட அரசு தவறிவிட்டது என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அந்தக் கட்சி, பொது நிதி விவகாரத்தில் வெளிப்படைத் தன்மை வேண்டும் என்றும் பொருளாதாரம் தொடர்பான புள்ளிவிவரங்களை உரிய நேரத்தில் வெளியிடுவதை உறுதி செய்யுமாறும் அரசைக் கேட்டுக் கொண்டது.

நாட்டின் பொது நிதி தொடர்பாக அரசின் வெளிப்படைத் தன்மை இல்லாததால் கவலை வெளியிட்டுள்ள அந்தக் கட்சி, பொருளாதார புள்ளி விவரங்களை வெளியிடுவதில் ஏற்படும் தாமதம் நாட்டின் கடன் மதிப்பீட்டில் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

அத்தோடு ஐக்கிய தேசியக் கட்சியின் அரசில் உயர்த்தப்பட்ட மற்றும் பலப்படுத்தப்பட்ட அந்நிய செலாவணி காரணமாக 2020 ஆம் ஆண்டுக்கான தேவையான கடனைத் திருப்பிச் செலுத்த தற்போதைய அரசில் முடிந்தது என்றும் அந்தக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

குறிப்பாக 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் புதிய அரசு பொறுப்பேற்பதற்கு முன்பு, நாட்டின் வெளிநாட்டு இருப்பு 1.4 டிரில்லியனாக இருந்தது என்றும், இது கருவூல அதிகாரிகளுக்கு இந்த ஆண்டுக்கான கடன் தேவைகளைப் பூர்த்தி செய்ய அனுமதித்தது என்றும் ஐக்கிய தேசியக் கட்சி குறிப்பிட்டுள்ளது.

மேலும் நாட்டின் பொது நிதிகளைக் கையாளும் போது பொறுப்பான முறையில் செயற்படுமாறும் ஐக்கிய தேசியக் கட்சி அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது.

# களுத்துறை மாவட்டத்தில் மேலும் சில பகுதிகள் தனிமைப்படுத்தலில்

*களுத்துறை மாவட்டத்தின் மேலும் சில பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.*

*அதன்படி பண்டாரகம பொலிஸ் பிரிவின் போகஹவத்தை, பமுணுமுல்ல, கிரிமன்துடாவ, கோராவல, அடலுகம மேற்கு, கலஹாமண்டிய ஆகிய 7 பொலிஸ் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.*

*இதே வேளை, கம்பஹா மாவட்டத்தின் நீர்கொழும்பு, ராகமை, வத்தளை, பேலியகொடை மற்றும் களனி ஆகிய பொலிஸ் பிரிவுகளில் தொடர்ந்தும் தனிமைப்படுத்தல் அமுலில் இருக்கும் என அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.*

# விமல் என்ற துரோகிக்கு மக்கள் பாடம் புகட்டுவர்!

## மனோ சாட்டையடி

விமல் வீரவன்சவுக்கு மண்டையில் முடியிருந்தாலும் மூளை இல்லை. அந்தத் துரோகி கட்சிக்கு மட்டுமல்ல கொழும்பு மாவட்ட மக்களுக்கும் இன்று துரோகம் இழைத்துள்ளார்.

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:–

கொழும்பு மாவட்டத்தில் வாழும் மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றனர். எவராவது மரணித்தால் சவப்பெட்டி வாங்குவதற்குக் கூட திண்டாட வேண்டியுள்ளது. அவர்கள் இவ்வாறு துன்பப்படுகையில் மக்களை இழிவுபடுத்தும் வகையில் விமல் கருத்து வெளியிடுகின்றார்.

விமல் வீரவன்சவின் வீட்டிலுள்ள நாயை பராமரிப்பதற்குக் கூட மாதமொன்றுக்கு 5 ஆயிரம் ரூபா செலவிடப்படுகின்றது என சமூக வலைத்தளங்களில் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. ஆனால், கொரோனா தாக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களை இழிவுபடுத்தும் வகையில் அவர் கருத்து வெளியிடுகின்றார்.

கொழும்பு மாநகர சபைக்கு சைக்கிளில் வந்த அவர் கட்சியைக் காட்டிக்கொடுத்துவிட்டு இன்று கோடீஸ்வரர் ஆகியுள்ளார். அடுத்த பொதுத்தேர்தலில் கொழும்பு மாவட்ட மக்கள் விமலுக்குத் தக்க பாடத்தை புகட்டுவார்கள் – என்றார்.

# பாடசாலைக் கொத்தணியை உருவாக்கி விடாதீர்!

## கல்வி அமைச்சரிடம் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

மூன்றாம் தவணைக் கற்றல் செயற்பாடுகளுக்காக நாளை பாடசாலைகள் மீண்டும் ஆரம்பமாகின்றன என்று அரசு அறிவித்துள்ள நிலை யில் தற்போதைய சூழலில் பாடசாலைகளை மீளவும் ஆரம்பித்து பாடசாலைக் கொத்தணியை உருவாக்கிவிடாதீர்கள் என கல்வி அமைச்சர் ஜி. எல். பீரிஸிடம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் கல்வி அமைச்சருக்கு இலங் கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

நாளை தரம் 6 முதல் தரம் 13 வரை பாடசாலைகள் ஆரம்பமாகும் என அறிவித்துள்ளீர்கள். இன்று வரை மரணங்கள் அதிகரித்தவாறு உள்ளன. தொற்றாளர்கள் எண்ணிக்கை உயர்ந்தே செல்கின்றது. மினுவாங்கொடை ஆடைத்தொழிற்சாலை கொத்தணியும், பேலியகொட கொத்தணியும் நாடு முழுவதும் பரவியுள்ளன.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை ஆரம்பிக்கும் போதே மினுவாங்கொடை ஆடைத்தொழிற் சாலை நோயாளர்கள் கண்டறியப்பட்டனர். அதன் காரணமாகவே பரீட்சையை இரு வாரங்களுக்காவது ஒத்திவைத்து தொற்றைக் கட்டுப்படுத்திய பின்னர் பரீட்சையை நடத்துங்கள் எனக் கேட்டோம். பரீட்சை தொடர்ந்தது. தொற்றோடு மாணவர்களும் பரீட்சை எழுதினர். அதனை இயல்பு நிலை எனக் கருதிய மக்கள் சாதாரணமாக நடந்து கொண்டனர். அதன் விளைவே இன்றைய மோசமான நிலைக்கும் காரணம்.

நாட்டில் உருவாகியுள்ள இரண்டு கொத்தணிகளுக்கு மேலதிகமாக பாடசாலை கொத்தணி என ஒன்று உருவாகுவதற்கு வழியேற்படுத்த வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

அத்தோடு சில அறிவுறுத்தல்கள் இன் னும் தெளிவில்லாமல் இருக்கின்றன.

01. ஆரம்பப் பிரிவுகள்(தரம் 1 முதல் தரம் 5 வரை) இணைந்துள்ள இடைநிலை, மேல்நிலைப் பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள் பாடசாலை செல்ல வேண்டுமா?

02. வெவ்வேறு மாவட்டங்களில் கடமையாற்றும், வேறு மாகாணங்களில் கடமையாற்றும் ஆசிரியர்கள் என்ன செய்ய வேண்டும். தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் வாழுகின்ற அதிபர்கள், ஆசிரியர்கள் பாடசாலைகள் இயங்கும் பிரதேசங்களுக்கு எவ்வாறு செல்வது அவர்களின் கடமை ஒழுங்கு என்ன?

போன்ற விடயங்களில் தெளிவான அறிவித்தல்களை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது.

மாவீரர் நிவைவேந்தல் வாரத்தையொட்டி

# வவுனியாவில் சிவப்பு, மஞ்சள் கொடிகள்: உடன் அகற்றுமாறு பொலிஸார் வற்புறுத்து




வவுனியா, நவ. 22

மாவீரர் வாரத்தை முன்னிட்டு சிவப்பு, மஞ்சள் கொடிகளைப் பறக்கவிட்டு உணர்வு பூர்வமாக நினைவேந்தல் நடவடிக்கை வவுனியாவில் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் குறித்த கொடிகளை அகற்றுமாறு கோரி வவுனியா பொலிஸார் அவ்விடத்தை முற்றுகையிட்டனர்.

நீதிமன்றக் கட்டளைக்கு அமைவாக ஆர்ப்பாட்டம் மற்றும் நடை பயணமின்றி சிவப்பு, மஞ்சள் கொடிகளை தனது வீட்டுடன் கூடிய கடை வாசலில் பறக்கவிட்டு தனது உறவுகளுக்கான நினைவேந்தல் வாரத்தை வவுனியா, தோணிக்கல் பகுதியில் செ. அரவிந்தன் என்பவர் ஆரம்பித்துள்ளார்.

தனது வீட்டு வாசலின் முன்பகுதியில் கம்பங்களில் சிவப்பு, மஞ்சள் கொடிகளைப் பறக்க விட்டுள்ள அவர், தனக்கு வழங்கப்பட்ட நீதிமன்றக் கட்டளையை மீறாத வகையில் இறந்த தனது உறவுகளைத் தான் நினைவுகூரவுள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் நேற்றிரவு 7.30 மணியளவில் அவ்விடத்திதுக்குச் சென்ற வவுனியா குற்றத்தடுப்புப் பொலிஸார் அக்கொடிகளை அகற்றுமாறு தெரிவித்தனர். நீதிமன்றக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட முடியாது எனவும் அவர்கள் கூறினர். அத்துடன் கொடிகளை நாட்டிய நபருடன் அவர்கள் தர்க்கத்திலும் ஈடுபட்டனர். இதன்போது தான் நீதிமன்றக் கட்டளைக்கு ஏற்பவே செயற்பட்டுள்ளேன் எனவும், சிவப்பு, மஞ்சள் கொடிகள் பறக்க விடத் தடையில்லை எனவும் பொலிஸாருடன் குறித்த இளைஞர் முரண்பட்டார்.

இதையடுத்து, மேலதிகாரியின் உத்தரவையடுத்து அவ்விடத்திலிருந்து பொலிஸார் அகன்று சென்றனர். மேலும், இராணுவத்தினரும் அவ்விடத்திற்கு வருகை தந்து கொடிகளைப் பார்வையிட்ட பின்னர் அங்கிருந்து சென்றனர். (100)

# கோட்டா ஆட்சியில் இருக்கும் வரைக்கும் மாவீரர் நினைவேந்தலுக்கு இடமில்லை!

## ஆளுங்கட்சி எம்.பி. மேஜர் பிரதீப் உந்துகொட திட்டவட்டம்

கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதியாக இருக்கும்வரை, மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வை நடத்துவதற்கு ஒருபோதும் அனு மதி வழங்கப்படமாட்டாது.

- இவ்வாறு ஆளுங்கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மேஜர் பிரதீப் உந்துகொட தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:-

சில தமிழ் அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் தாயகக் கோட்பாட்டைத் தொடர்ந்தும் முன்னெடுக்கின்றார்கள். உயிரிழந்த விடுதலைப்புலிகளை நினைவு கூரும் மாவீரர் நாள் பற்றியும் நாடாளுமன்றத்தில் கதைக்கின்றார்கள்.

நாட்டில் தற்போது முதுகெலும்புள்ள அரசியல் தலைவர்களே ஆட்சியில் இருக்கின்றார்கள். எனவே, கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருக்கும் வரை மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வை நடத்துவதற்கு இடமளிக்கப்படாது - என்றார்.

# 2 எறிகணை குண்டுகள் மீட்பு




யாழ்ப்பாணம், பலாலி அன்ரனிபுரப் பகுதியில் உள்ள தனியார் காணியொன்றில் இருந்து துருப்பிடித்த நிலையில் இரண்டு எறிகணை குண்டுகள் மீட்கப் பட்டுள்ளன.

அன்ரனிபுரத்தில் தனியார் காணியின் உரிமையாளர் தனது காணியைத் துப்பரவுசெய்யும்போது குறித்த குண்டுகளை கண்டுள்ளார். அவர் உடனடியாகத் துப்புரவுப் பணியை நிறுத்திவிட்டு பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு அறிவித்துள்ளார். பொலிஸார் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரின் உதவியுடன் குறித்த குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன குண்டுகளைச் செயலிழப்பதற்காக வட்டுக்கோட்டைப் பகுதியிலுள்ள தரவைப் பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன.

# 30 நாள்களில் 70 பேர் சாவு!

## அடங்க மறுக்கும் கொரோனா

இலங்கையில் கொரோனா வைரஸ் மூன்றாவது அலை மூலம் நேற்றிரவு வரை 16 ஆயிரத்து 252 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது. இவர்களில் இதுவரையில் (ஒக்டோபர் 22 முதல் நவம்பர் வரை) 70 பேர் பலியாகியுள்ள னர்.

மினுவாங்கொடை கொத்தணி மூலம் 3 ஆயிரத்து 59 பேருக்கும், பேலியகொட கொத்தணி மூலம் 13 ஆயிரத்துக்கும்மேற்பட்டோருக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது.

இவ்வாறு மூன்றாவது அலை மூலம் கொரோனா தொற்றியவர்களில் நேற்று வரை 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் குணமடைந்துள்ளனர்.

அதேவேளை, இலங்கையில் நேற்று வரை மொத்தமாக 19 ஆயிரத்து 771 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது. இவர்களில் 13 ஆயிரத்து 590 பேர் குணமடைந்துள்ளனர்.

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் நேற்றும் ஒன்பது பேர் உயிரிழந்துள்ளனர். இவர்கள் கொழும்பு பகுதியைச் சேர்ந்தவர்கள்.

இதன்படி இலங்கையில் கொரோனா தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 83 ஆக அதிகரித்துள்ளது.

# சஹ்ரானை வழிநடத்தியவர்கள் கண்டறியப்படும் வரை தேசிய பாதுகாப்பை ஒருபோதும் உறுதிப்படுத்த முடியாது

## முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சாட்சியம்

கொழும்பு, நவ. 22

இலங்கையில் தீவிரவாதத் தாக்குதலுக்கு சஹ் ரான் ஹாசீமை வழிநடத்தியவர்கள் அடையாளம் காணப்படும் வரை நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தவே முடியாது என்று குற்றப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விசாரணைகளை முன்னெடுக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியளிக்கும்போதே, அவர் இத னைக் கூறியுள்ளார்.

ஈஸ்டர் தாக்குதலின் பின்னணியில் உள்ளவர்கள் அடையாளம் காணப்படும் வரையில் இந்த விசார ணைகள் பூரணமடையாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொடர் குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரியான சஹ்ரானுக்கும் வெளிநாட்டு தீவிரவாத அமைப்புக ளுக்கும் இடையிலான தொடர்புகளைக் கண்டறிய பல் வேறு புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அவ்வாறான தொடர்புகள் வெளிப்படவில்லை என்றும் ரவி செனவிரத்ன சாட்சியமளித்துள்ளார்.

சஹ்ரானை வழிநடத்தியவர்கள் அடையாளம் காணப்படும் வரை இலங்கையின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாது என்று தெரிவித்துள்ள அவர், தாக்குதல்களின் பின்னணியில் உள்ளவர்கள் கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தியுள்ளார்.

# ஆயுதப் போராட்டத்தையே ஏற்றுக் கொள்ளாத சுமந்திரன் அதில் ஈடுபட்டு மரணித்தோரை எப்படி ஏற்றுக்கொள்வார்?

## சுரேஷ் பிறேமச்சந்திரன் கேள்வி

(பிரபாகரன் டிலக்சன்)

ஆயுதப் போராட்டத்தை ஏற்றுக் கொள்ளாத சுமந்திரன் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு மரணமடைந்தவர்களை எவ்வாறு ஏற்றுக்கொள்வார் என ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் கேள்வியெழுப்பியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் உயிர்நீத்த பண்டிதர் என அழைக்கப்படும்

சின்னத்துரை ரவீந்திரனது வீட்டில் நேற்றைய தினம் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் விளக்கேற்றி அஞ்சலி செலுத்தினார். இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே சுரேஷ் பிறேமசந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

வீடுகளில் வைத்து எல்லோரும் விளக்கேற்றலாம். அதில் யாருக்கும் எந்தத் தடையும் இல்லை. அவர் துயிலும் இல்லத்திற்கு வந்து அஞ்சாது விளக்கேற்ற வேண்டும். சுமந்திரன் ஆயுதப் போராட்டத்தை ஏற்றுக்கொள்ளாதவர் என்பது வெளிப்படையாக தெரிந்த உண்மை. அவ்வாறு இருக்கையில் ஆயுதப் போராட்டத்தின் போது உயிர்நீத்தவர்களை எவ்வாறு ஏற்றுக் கொள்வார்? - எனக் கேள்வியெழுப்பினார்.

# யுத்தம் பாதித்த வடக்கு – கிழக்கு மக்களுக்கு வரவு – செலவுத் திட்டத்தால் பயன் ஏதுமில்லை!

## நாடாளுமன்றில் கஜேந்திரன் எம்.பி. காட்டம்

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட எமது உறவுகளுக்கு எந்த வித நிவாரணமும் உள்ளடக்கப்படாத வரவு – செலவுத் திட்டமொன்றையே இம்முறை அரசு முன்வைத்துள்ளது. வடக்கு, கிழக்கு என்பது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் என்பதை இந்த வரவு – செலவுத் திட்டம் முற்றாக மூடி மறைத்துள்ளது.

– இவ்வாறு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை, 2021 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலம் மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்த வரவு – செலவுத் திட்டம் சிங்கள தேசத்தையும், யுத்தத்தால் அழிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு பகுதிகளையும் சமத்துவம் ஆக்கும் நோக்கில் முன்வைக்கப்படவில்லை.

யுத்தத்தால் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த மக்களின் கோடிக்கணக்கான சொத்துக்கள் மற்றும் வர்த்தகங்கள் அழிக்கப்பட்டுள்ளன என்பது அனைவருக்கும் தெரியும்.

போரால் உயிரிழந்தவர்களின் குடும்பங்கள், பெற்றோரை இழந்து தவிக்கும் பிள்ளைகள், பிள்ளைகளை இழந்து தவிக்கும் வயது முதிர்ந்தவர்கள், சரணடைந்தவர்களின் குடும்பங்கள், வலிந்து காணாமல்



ஆக்கப்பட்டவர்களில் தங்கியிருந்த பெண்கள், முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டவர்கள், முன்னாள் போராளிகள், புனர்வாழ்வு பெற்றவர்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பல்வேறு தரப்பினர்களை இந்த வரவு – செலவுத் திட்டம் கைவிட்டுள்ளது.

அழிவுகளிலிருந்து மீளக்கட்டியெழுப்புவதற்கான ஒதுக்கீடுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. அனைவரும் தமிழர்கள் என்ற ஒரே காரணத்துக்காகவே வடக்கு, கிழக்கு புறக்கணிக்கப்பட்டுள்ளது.

தேசிய கொள்கை என்ற பெயரில் தென்பகுதியையும், போரால் அழிக்கப்பட்ட வடக்கு கிழக்கையும் ஒரே மாதிரி கட்டியெழுப்ப முடியாது. இலங்கையில் மிகவும் ஏழ்மையானவர்கள் வாழும் பகுதியாக வடக்கு, கிழக்கு மாத்திரமே காணப்படுகிறது. கடந்த 11 வருடங்களாக மாறி மாறி ஆட்சிக்கு வந்தவர்களின் கொள்கைகளால் இந்தப் பிரதேசங்கள் முன்னேற முடியாதவாறு முடங்கிப்போயுள்ளன.

உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிப்பது தொடர்பாக அறிவிப்புக்கள் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறான நிலையில் வடக்கு கிழக்கில் நீரியல்வளத் திணைக்களம் மற்றும் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் தென்னிலங்கை மீனவர்களின் சட்டவிரோதமான மீன்பிடிகளை அதிகரித்துள்ளனர்.

இதனால் வடக்கு கிழக்கின் நீண்ட கடற்பிரதேசம் அழிக்கப்பட்டுள்ளது. இதனால் பல நூற்றுக்கணக்கான மீனவர்கள் தொழிலை கைவிட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது. தமிழர்களின் விவசாய நடவடிக்கைகள், மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை, வனஜீவராசிகள் திணைக்களம் உள்ளிட்ட அரச நிறுவனங்களால் அழிக்கப்பட்டுள்ளன. சுதந்திரமாக மக்கள் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை.

முல்லைத்தீவு மணலாறு பகுதிகளில் காணிகளை வைத்திருந்தவர்களின் உரிமங்கள் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பறிக்கப்பட்டு சிங்கள மக்களுக்குக் கையளிக்கப்பட்டுள்ளன. இதனை மீள வழங்குமாறு கோரியும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மட்டக்களப்பு மாவட்டத்தில் 3 லட்சம் மாடுகளைக் கொண்டுள்ள பண்ணையாளர்கள் தமது இடங்களிலிருந்து வெளியேறும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். – என்றார்.

# தொடர் முடக்கத்தினால் பட்டினி நிலையில் நாம்!

## மோதரை, இக்பாவத்தை மக்கள் வீதியில் இறங்கிப் போராட்டம்





கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாக கடந்த ஒரு மாதகாலமாகத் தொடரும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தால், தமது வாழ்வாரம் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக கூறி மோதரை மற்றும் இக்பாவத்தை பகுதி மக்கள் போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், இந்த போராட்டத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு பொலிஸார் முயன்றபோதும், அதிகளவான மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டமையால் அங்கிருந்து அவர்கள் வெளியேறியுள்ளனர்.

இந்நிலையில் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளதாவது –

கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் எங்களது பகுதிகளில் அதிகரித்தமையால் கடந்த ஒரு மாதகாலமாக தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கின்றது.

இதனால் தொழிலுக்கு செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதுடன், அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட 5 ஆயிரம் ரூபா எங்களது குடும்பத்தின் தேவைக்குப் போதுமானதாக இல்லை.

மேலும் உணவின்றி பட்டினி கிடக்கும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளோம். எனவே அரசு எங்களது நிலைமையை உணர்ந்து உடனடியாக நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சிறு குழந்தைகள், பெண்கள் மற்றும் முதியவர்கள் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர். – என போராட்டத்தில்ஈடுபட்டுள்ளோர்கவலைவெளியிட்டுள்ளனர்.

# சவால்களை எதிர்கொள்வதை விளக்க அரசு தவறிவிட்டது!

## ஐ.தே.க. பிரதித் தலைவர் ருவான் தெரிவிப்பு

வரவு – செலவுத் திட்டத்தில் சில நல்ல திட்டங்கள் இருந்தாலும் தற்போது நாடு எதிர்கொள்ளும் பொருளாதார சவால்களுக்கு முகம் கொடுப்பது தொடர்பான திட்டங்கள் பற்றிய விளக்கம் இல்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், நாட்டின் தற்போதைய பொருளாதாரத்தின் நிலைமையை வெளிப்படுத்த அரசு தவறிவிட்டது என்றும் இந்த சவால்களை எவ்வாறு சமாளிக்கப் போகிறது என்பதைக் காட்டத் தவறிவிட்டது என்றும் குற்றம் சாட்டினார்.

பொருளாதார சிக்கல்களால் பெருமளவான நிறுவனங்கள் அடுத்த



ஆண்டு மூடப்படவுள்ளன, அத்தோடு பலர் வேலையை இழக்கும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ள நிலையில் இந்த பிரச்சினையை எவ்வாறு கையாளப் போகிறது என்பது தொடர்பாக அரசு பேசவில்லை என ருவான் விஜேவர்தன சுட்டிக்காட்டினார்.

மேலும் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் நாளாந்த ஊதியத்தை நம்பி இருக்கும் மக்களுக்கு வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவிலும் அரசு சிரமத்தை எதிர்கொள்கிறது எனக் குறிப்பிட்ட ருவான் விஜேவர்தன, இந்தத் திட்டத்தை தொடர முடியாவிட்டால் அரசு மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை, வரவு – செலவுத் திட்டத்தில் ஓய்வூதிய வயதை 60 ஆக உயர்த்துவதற்கான திட்டம் வரவேற்கத்தக்கது எனத் தெரிவித்த ருவான் விஜேவர்தன, இருப்பினும், ஈ.பி.எவ். கோருவதற்கான தகுதியான வயதை 60 ஆக நீடிக்கும் போது, அவர்களின் நோக்கம் என்ன என்பது தெளிவாகத் தெரியவில்லை என்றும் குறிப்பிட்டார்.

அத்தோடு 2021 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் விவசாயம் போன்ற துறைகளில் அதிக கவனம் செலுத்துவது பாராட்டத்தக்கது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# மட்டக்களப்பு, தேத்தாதீவு விபத்து: சிகிச்சை பலனின்றி சிறுமி சாவு!


மட்டக்களப்பு, தேத்தாதீவில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த சிறுமி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என வைத்தியசாலை வட்டாரம் தெரிவிக்கின்றது. தேத்தாதீவைச் சேர்ந்த 7 வயது சிறுமி ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குபட்பட்ட தேத்தாதீவு கிராமத்தில் கடந்த வெள்ளிக்கிழமை காலை 6.30 மணியளவில் பிரதான வீதியை கடந்து கடைக்குச் சென்று திரும்பிய 7 வயது சிறுமி மீது பொலன்னறுவைப் பகுதியிலிருந்து கல்முனை நோக்கிச் சென்று கொண்டிருந்த சிறிய ரக லெறி ஒன்று மோதியதில் அந்தச் சிறுமி படுகாயம் அடைந்த நிலையில் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த சிறுமி உடனடியாக களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

சிறுமிக்கு மேலதிக சிகிச்சையை தொடர சி.ரி.ஸ்கான் எடுக்க வைத்தியர்கள் ஆலோசித்தபோதும் சி.ரி.ஸ்கான் எடுக்கும் கதிரியக்கவியலாளர்கள் கடந்த 2 அரை



மாதங்களாகத் தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபட்டு கடமைக்குச்சமுகம்கொடுக்காமல் இருந்துவருகின்றாமையால் கால தாமதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன் பின்னர் சி.ரி.ஸ்கான் அறிக்கையைப் பார்வையிட்ட வைத்தியர்கள் சத்திரசிகிச்சை மேற்கொள்ளும் அளவிற்கு சிறுமியின் உடல் நிலை இல்லை எனத் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் வெள்ளிக்கிழமை இரவு சிறுமி உயிரிழந்துள்ளார். சிறுமியின் உடலைப் பார்வையிட்ட களுவாஞ்சிகுடி பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரி எஸ்.ஜீவரெட்ணம் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டுள்ளார். விபத்து தொடர்பில் லொறியின் சாரதி களுவாஞ்சிகுடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளமையோடு, சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# வாழவேண்டியவர்களை கல்லறையாக்கிவிட்டு மயானங்களைத் துப்புரவு செய்கின்றார்கள்!

## அமைச்சர் டக்ளஸ் கிண்டல்



கொழும்பு, நவ. 23

தமிழ் மக்கள் மத்தியில் வரவு – செலவுத் திட்டம் தொடர்பாக வீணான புரளிகளை பரப்பி சுயலாப அரசியல் நடத்துகின்ற தரப்பினர் வாழ வேண்டியவர்களை கல்லறைகளாக்கி விட்டு தற்போது மயானங்களைத் துப்புரவாக்குகின்றார்களே தவிர, மக்களின் துயரங்களை துப்புரவு செய்யத் தயாரில்லை என்று குற்றஞ்சாட்டிய கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறானவர்களை எந்தக் கல்லறையும் ஏற்றுக்கொள்ளாது எனவும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்று வருகின்ற வரவு – செலவுத் திட்ட விவாதத்தில் நேற்றுமுன்தினம் கலந்துகொண்டு உரையாற்றும் போதே கடற்றொழில் அமைச்சரால் இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் –

விவசாயம் – பெருந்தோட்டம் – கடற்றொழில் துறைகள் உட்பட எமது நாட்டின் வளங்களை கொண்ட உற்பத்தித் துறைகளின் வளர்ச்சியே தற்போதைய நாட்டின் தேவையாக உள்ளது.

காலத்திற்கேற்ப தேவைகளை இனங்கண்டு, அவற்றை இயன்றளவு பூர்த்தி செய்கின்ற வகையிலேயே இந்த வரவு – செலவுத் திட்டம் அமைந்திருக்கின்றது.

ஆனால் பாதுகாப்பு அமைச்சுக்கு பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ள விடயத்தைப் பேசுபொருளாக்கி தமிழ் மக்கள் மத்தியில் வீண் புரளியைக் கிளப்புகின்ற சுயலாப அரசியல் தமிழ் மக்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பாதுகாப்பு அமைச்சு என்பது அதிகளவிலான ஆளணிகளை வைத்துக் கொண்டு பராமரிக்கின்ற ஓர் அமைச்சு மட்டும் அல்ல.

அனைத்து இன மக்களும் பாதுகாப்பாக வாழக் கூடிய சூழலை ஏற்படுத்துகின்ற, மக்களது பாதுகாப்பை உறுதி செய்கின்ற நடவடிக்கைகளோடு சர்வதேச முதலீட்டு வாய்ப்புகளை விரிவுபடுத்துகின்ற வகையில் பாதுகாப்பான சூழலை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பையும் அது கொண்டிருக்கின்றது.

அதேநேரம் போதைவஸ்து பாவனையிலிருந்து இந்த நாட்டை விடுவித்தல், வறுமை ஒழிப்பு மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு, கடலோரப் பாதுகாப்பு, தொல்பொருள் திணைக்களம், கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்தல் போன்ற மிக முக்கிய பணிக் கூறுகளை பாதுகாப்பு அமைச்சு கொண்டிருக்கின்றது.

எம்மைப் பொறுத்தவரையில், கிடைக்கின்ற வளங்களை எல்லாம் பயன்படுத்தி எமது மக்களும் அனைத்து உரிமைகளும் பெற்றவர்களாக வாழ வேண்டும். அதற்கான அனைத்துத் தேவைகளையும் கௌரவமாக எமது மக்கள் பெற வேண்டும். அதற்காகவே நாம் உழைக்கின்றோம். அந்த வகையில் இந்த வரவு – செலவுத் திட்டத்தை வரவேற்கின்றோம்.

ஆனால் மயானங்களைத் துப்புரவு செய்கின்ற இவர்கள் எமது மக்களின் துயரங்களைத் துப்புரவு செய்வதற்குத் தயாராக இல்லை. வாழ வேண்டிய எமது மக்களை கல்லறைகளாக்கிவிட்டு வாழுகின்ற எமது மக்களுக்கு துரோகிகளாகிவிட்ட இவர்களின் வரலாறுகளை எந்தக் கல்லறையும் ஏற்றுக் கொள்ளாது என்றே தமிழ் அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். – என்று தெரிவித்தார்.

மேலும் இன்றைய தினம் (நேற்று முன்தினம்) உலகெங்கும் சர்வதேச கடற்றொழிலாளர் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றமையை சுட்டிக்காட்டிய கடற்றொழில் அமைச்சர், கடற்றொழிலாளர் சமூகத்திற்கு தன்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்தமையுடன் அவர்கள் எதிர்கொள்கின்ற அனைத்துப் பிரச்சினைகளுக்கும் நிரந்தர தீர்வுகள் பெற்றுத் தரப்படும் என்றும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வரவு – செலவுத் திட்டத்தின் பிரதிபலன் ஒரு வருடத்தின் பின்னரே தெரியவரும்!

## அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய

2021 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் பிரதிபலன்கள் ஒரு வருடத்தின் பின்னரே தெரியவரும் என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வரவு செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகளை நடைமுறைப்படுத்தி நாட்டை முன்னுக்குக் கொண்டுசெல்லலாம் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் (சனிக்கிழமை) இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், எதிர்க்கட்சியினர் வரவு – செலவுத் திட்ட யோசனைகளை இலக்கங்களாலும் கணக்கு அறிக்கைகளாலும் விமர்சித்து வருகின்றனர் எனக் குறிப்பிட்டுள்ள அவர், இவர்களின் வாதம் ஒருவருடத்துக்கு பின்னரே மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஏனெனில், ஒரு வருடத்துக்குப் பின்னரே இந்த வரவு – செலவுத் திட்ட யோசனைகள் வெற்றியடைந்துள்ளதா அல்லது தோல்வியுற்றுள்ளதா எனத் தெரிந்துகொள்ள முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ 2005 இல் ஆட்சியைக் கைப்பற்றியபோது உலகப் பொருளாதார நெருக்கடி, சுனாமிப் பேரழிவு மற்றும் எரிபொருள் விலை உயர்வு என பிரதான மூன்று நெருக்கடிக்கு முகம் கொடுத்திருந்தார்.



அன்று எமது நாட்டின் மொத்த உள்நாட்டு பெறுமதி 24.4 டொலர் மில்லியனாக இருந்தது. 98.2 கடன் சுமையை ஒன்பது வருடத்தில் 72.3 இற்குக் குறைக்க முடியுமாகியது. நாட்டின் பெறுமதியை 79.4 டொலர் மில்லியன் வரை அதிகரிக்க முடியுமாகியது.

இந்த விடயங்கள் அன்று கனவாகவே இருந்தன. இன்றைக்கும் வரவு செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்டிருக்கும் யோசனைகளை எதிர்க்கட்சியில் சிலர் கனவு என்றே தெரிவிக்கின்றனர். ஆனால், கனவுகளை நனவாக்கும் குழுவே இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளது. – எனத் தெரிவித்துள்ளார்.

# பிரதமருக்குக் கிடைத்த அரிய பிறந்தநாள் பரிசில்!

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது முதல் வாகனமான விண்டேஜ் மோட்டார் காரை மீளப் பரிசாக பெற்றுள்ளார்.

பிரதமரிடம் இருந்து பியட் 124 ஸ்போர்ட்ஸ் கூபே வாகனத்தை பல ஆண்டுகளுக்கு முன்பு வாங்கிய குடும்பத்தினரால் அது மீண்டும் பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

வாகனத்தை வாங்கிய எஸ். எ. அமரசிறி இந்தியாவில் நடைபெற்ற ஒரு மோட்டார் பேரணியில் வென்றுள்ளார், அதில் அவர் பியட் 124 ஸ்போர்ட்ஸ் கூபே உடன் பங்கேற்றுள்ளார்.

இது இப்போது 50 ஆண்டு பழைமையான விண்டேஜ் மோட்டார் காராகும். 75 ஆவது பிறந்தநாளை நினைவுகூரும் வகையில் பிரதமரின் மகன் யோஷிதா ராஜபக்ஷவின் வேண்டுகோளுக்கமைய நேற்று அதன் முதல் உரிமையாளரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அமரசிறியின் மகனும் குடும்பத்தினரும் வாகனத்தை அனுப்பி வைத்துள்ளனர்.



# கொரோனா உயிரிழந்தவர்களை தகனம் செய்வதே ஒரே வழி!

## நிபுணர் குழு அறிக்கை

கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்களின் உடல்களைத் தகனம் செய்வதே ஒரேயொரு சாத்தியமான வழி என அரசு நியமித்துள்ள நிபுணர்கள் குழு தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸால் உயிரிழப்பவர்களைத் தகனம் செய்வதற்கு இஸ்லாமிய மக்கள் எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர். மேலும் சடலங்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்குமாறும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனையடுத்து, கொரோனாவால் உயிரிழந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்வது சாத்தியமா என்பதை ஆராய்வதற்காக அரசால் நிபுணர்கள் குழு நியமிக்கப்பட்டிருந்தது.

குறித்த குழுவினர் இது தொடர்பில் ஆராய்ந்துள்ளனர். இந்த நிலையிலேயே, உடல்களைத் தகனம் செய்வதே ஒரே வழி என அந்தக் குழு தெரிவித்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

# மார்ச் மாதத்துக்குப் பின்பே இலங்கையில் விமான நிலையத்தை திறக்கும் சாத்தியம்

## ராஜபக்ஷ அரசு அறிவிப்பு

அடுத்த வருடம் மார்ச் மாதத்துக்குப் பின்னரே விமான நிலையத்தை திறக்க முடியுமாக இருக்கும் என்று அரசு அறிவித்துள்ளது.

தற்போது அத்தியாவசிய விமான சேவைகள் நடைபெறுகின்ற போதும், அதனைத் தவிர்ந்து வேறெந்த விமான சேவைகளும் முன்னெடுக்கப்படுவதில்லை.

இந்த ஆண்டு இறுதியில் விமான நிலையங்களைத் திறக்க அரசு நடவடிக்கை எடுக்கும் எனத் தெரிவிக்கப்பட்ட போதும், தற்போதைய நிலைமைகளைக் கருத்தில்கொண்டு விமான நிலையத்தைத் திறக்கும் நடவடிக்கையைப் பிற்போடுவதற்கு ஆராய்ந்து வருவதாகவே தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து போக்குவரத்துத்துறை அமைச்சர் காமினி லொக்குகேவிடம் கேட்டபோது, நாட்டின் விமான நிலையத்தைத் திறக்க இன்னமும் எந்தத் தீர்மானம் எடுக்கப்படவில்லை என்று குறிப்பிட்டார்.

மேல் மாகாணத்திலும் ஏனைய பிரதேசங்களிலும் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காணப்படும் நிலையில் இந்த ஆண்டு இறுதிவரை விமான நிலையங்களைத் திறக்க முடியாது என்பதை உறுதியாகத் தெரிவிக்க முடியும் என்றும் அமைச்சர் கூறினார்.

நாட்டில் பொதுப் போக்குவரத்தை சுகாதாரப் பாதுகாப்பு விதிமுறைகளுடன் முன்னெடுத்துச் செல்கின்ற போதும், விமான சேவைகளை அவ்வாறு முன்னெடுப்பது முடியாத நிலைமையே காணப்படுகின்றது என்றும், எப்படியும் மார்ச் மாதத்துக்குப் பின்னரே அதனைத் திறக்க முடியுமாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்தியாவசிய விமான சேவைகள் தவிர்ந்த ஏனைய சகல விமான பயணங்களும் நிறுத்தப்பட்டுள்ள காரணத்தால் இப்போதைக்கு விமான சேவைகள் வழமைக்கு திரும்பாது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# உயிர்நீத்த மாவீரர்களுக்கான அஞ்சலியை மக்கள் எவ்வாறாயினும் மேற்கொள்வார்கள்!

## சாள்ஸ் எம்.பி. நம்பிக்கை

மாவீரர் தினத்தை நினைவு கூரு வதற்கு வடக்கு கிழக்கில் அரசு பல்வேறு தடைகளை விதித்துள்ள போதும் தமிழ் மக்களுக்காக உயிர்நீத்த மாவீரர்கள் மற்றும் மக்களுக்கான அஞ்சலியை மக்கள் ஏதோ ஒரு வகையில் மேற்கொள்ளுவார்கள் எனத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த 2019 ஆம் ஆண்டு புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி நவம்பர் மாதம் 16 ஆம் திகதி தெரிவு செய்யப்பட்டாலும், கடந்த வருடம் மாவீரர்களினுடைய, மாவீரர்களை அடக்கம் செய்த இடங்களுக்கும் உறவினர்கள் சென்று அஞ்சலி செலுத்த பெரிய அளவில் தடை விதிக்கப்படவில்லை.

அரசாங்கத்தினுடைய காரணம் நாடாளுமன்றத் தேர்தல் ஒன்று இடம்பெற இருந்த சூழ்நிலையில், தமிழ் மக்களினுடைய வாக்கைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக 2019 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகளில் பெரிய அளவில் தடை ஏற்படுத்தப்படவில்லை.

ஆனால் தற்போது கடந்த மாதம் தியாகதீபம் திலீபனுடைய நினைவேந்தல்களின் போது அவருடைய நினைவுநாள் அஞ்சலி நிகழ்வுகளுக்கும் நீதிமன்ற தடை உத்தரவை எனக்கும் எடுத்திருந்தார்கள். என்னைப் போல பலருக்கும் நீதிமன்ற தடை உத்தரவை எடுத்திருந்தார்கள். அதேபோல நவம்பர் மாதம் 27 ஆம் திகதி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துகின்ற நிகழ்வுக்குக் கூட இந்த அரசாங்கம் முழுமையான நீதிமன்ற தடை உத்தரவை விடுத்திருக்கிறார்.

மேலும் இன்றிலிருந்து (நேற்று) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒரு வர்த்தமானி அறிவித்தலை கையெழுத்திட்டு நடைமுறைப்படுத்தி இருக்கிறார். இலங்கையினுடைய பொதுமக்களுடைய பாதுகாப்புக்கு முழுமையான பொறுப்பும் இராணுவம் மற்றும் முப்படைக்கும் அந்தப் பொறுப்பை ஒப்படைப்பதாக வர்த்தமானி அறிவித்தல் மூலம் நேற்று முதல் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றது.

2019 ஆம் ஆண்டுக்குப் பிறகு புதிதாக வந்த இந்த அரசு தமிழ் மக்களை ஓர் அச்ச உணர்வில் சுயமாக செயற்பட முடியாதவாறு கொண்டு வருவதற்குத்தான் இந்த மாவீரர்களின் அஞ்சலி நிகழ்வுகளுக்கும், பொது மக்களுடைய பாதுகாப்பு இராணுவத்திடம் ஒப்படைப்பது குறிப்பாக நவம்பர் 21 ஆம் திகதியில் இருந்து மாவீரர் வாரம் ஆரம்பிக்கப்படுகின்ற நிலையில் அவசர அவசரமாக 22 ஆம் திகதியில் இருந்து பொது மக்களுடைய பாதுகாப்பு முழுமையாக இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

குறிப்பாக வடக்கு கிழக்கில் இருக்கின்ற தமிழ் மக்களை நசுக்கி – அவர்களை மிரட்டி – தான் யுத்தத்தை எப்படி வழி நடத்திய போது தமிழ் மக்கள் எப்படி அச்ச உணர்வுகளோடு இருந்தார்களோ அதே அச்ச உணர்வை தொடர்ச்சியாக தக்க



வைத்து தங்களுடைய குடியேற்றங்களை குறிப்பாக தமிழ் மக்கள் அரசாங்கத்தினுடைய செயற்பாடுகளுக்கு எதிராகச் செயற்படாமல் விடுத்து அச்ச உணர்வு இருக்கின்றபோது வடக்கு கிழக்கில் தமிழர்களுடைய பூர்வீக நிலங்களில் சிங்களக் குடியேற்றங்களை மிக விரைவாகச் செய்வதற்கு இந்த அரசாங்கம் முயற்சியை மேற்கொண்டு வருகின்றது.

– கொரோனா தொற்று உலகத்தில் பல நாடுகளில் பல அழிவுகளை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையிலும் அதனுடைய தாக்கம் தற்போது மிகத் தீவிரமாக அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. இந்த சூழ்நிலையில் இஸ்லாமிய மதத்தலைவர்கள் மூலம் கோரிக்கை விடப்பட்டிருந்தது.

கொரோனா தொற்றால் மரணிக்கின்ற தங்களுடைய மதத்தைச் சேர்ந்தவர்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி தரவேண்டும் என்று. அதனை நான் வரவேற்கிறேன். அவர்களுடைய மதம் சார்ந்த நம்பிக்கைக்கு சுகாதார அமைச்சின் ஆலோசனையைப் பெற்று அதை செய்வதை நான் வரவேற்கின்றேன். அந்த விடயம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் என்னுடைய யோசனையை நான் கூறியிருக்கின்றேன். ஆனால் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் இலங்கையில் கொரோனா தொற்றில் மரணிக்கின்ற அனைத்து முஸ்லிம் உறவுகளினுடைய உடல்களை மன்னார் மாவட்டத்தில் அடக்கம் செய்வதற்கு ஒரு யோசனை முன்வைத்தார் என அறிகின்றேன்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் கேட்க விரும்புகின்றேன். மன்னார் என்ன சுடுகாடா? கடல் இருக்கின்ற பிரதேசத்தில் அடக்கம் செய்யவேண்டும் என்றால் இலங்கையை சுற்றி எல்லா இடமும் கடல் தான் இருக்கின்றது. அந்தந்த மாவட்டங்களில் இறக்கின்றவர்களை அவர்களுடைய மாவட்டத்தில் ஒரு பொதுவான இடத்தில் அடக்கம் செய்வதுதான் முறை. ஆனால் ஏனைய மாவட்டங்களில் மரணிக்கின்றவர்களையும் மன்னார் மாவட்டத்தில் அடக்கம் செய்வது என்பதை மன்னார் மாவட்ட மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

அது ஒரு நியாயமான செயலும் அல்ல. அபிவிருத்திகளை அம்பாந்தோட்டை அவர்களுடைய மாவட்டங்களுக்கு செய்து கொண்டு சடலங்களை அடக்கம் செய்வதற்கு மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்ய மன்னார் மாவட்டம் என்ன சுடுகாடா என்பதை அரசாங்கத்திடம் கேட்க விரும்புகின்றேன்.– என அவர் மேலும் தெரிவித்தார்.

# இணையத் தள ஒழுங்கு முறையான திட்டம் வகுப்பு!

## என்கிறார் கெஹலிய

இணையத் தளங்களை ஒழுங்கு படுத்துவதற்கான முறையான திட்டமொன்று எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் வகுக்கப்படவுள்ளதாக அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் வெகுஜன ஊடகங்கள் மற்றும் தகவல் தொடர்பாடல் அமைச்சின்



ஆலோசனைக் குழுக்கூட்டத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் பத்திரிகை கவுன்சில் சட்டம் குடிமக்களின் கௌரவத்தைப் பாதுகாக்கும் வகையில் திருத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

அனைத்து குடிமக்களின் உரிமைகளும் ஊடகங்களால் பாதுகாக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்த அவர், கட்டுப்பாடுகள் இருக்க வேண்டும் என்றும் ஊடக ஒழுங்குமுறைகள் தேவை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், ஊடகவியலாளர்களுக்கான காப்பீட்டு திட்டமொன்று விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகவும் அமைச்சர் இதன்போது குறிப்பிட்டார்

# ஒக்ஸ்போர்ட் கொரோனா தடுப்பூசி ஆய்வில் இலங்கைப் பெண்மணி!



கொவிட் – 19 கொரோனா வைரஸ் தொற்று நோயை தடுப்பதற்கான மருந்தை கண்டுபிடிக்கும் பிரித்தானியாவின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக ஆய்வில் பிரதம ஆய்வாளராக இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட மஹேஷி என். ராமசாமி நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கையில் பிறந்த அவர், பிரித்தானியாவில் வைத்திய கல்வியை படித்து முடித்துள்ளார்.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தால் கொவிட் – 19 தடுப்பூசிக்கான ஆய்வுகள் தற்போது நடத்தப்பட்டு வருகின்ற நிலையிலேயே, இவர் அந்த குழுவில் இடம்பிடித்துள்ளார்.

அவர் மேகன் மருத்துவக் கல்லூரியில் முதன்மை விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார். மேலும், ஒக்ஸ்போர்ட் தடுப்பூசி குழுமத்தின் பிரதம ஆய்வாளராகவும், ஒக்ஸ் போர்ட் பல்கலைக்கழகத்தில் விருது பெற்ற மூத்த மருத்துவ விரிவுரையாளராகவும் உள் ளார்.

மருத்துவ சஞ்சிகையான The Lancet சஞ்சிகையின் உலகில் ஒக்ஸ்போர்ட் கொவிட் தடுப்பூசி என்று அழைக்கப்படும் ChAdOx1 nCoV-19 தடுப்பூசி தொடர்பான ஆய்வுக் கட்டுரையில், மஹேஷி என் ராமசாமியின் பெயர் முன்னிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மஹேஷி என் ராமசாமியின் தாய் பேராசிரியர் சமர நாயக்க ராமசாமி, கொழும்பு விசாக்கா கல்லூரியின்பழைய மாணவி என்பதுடன், கொழும்பு பல்கலைக்கழகத் தில் விலங்கியல் துறையில் பட்டம் பெற்றுள்ளார்.

அவரது தந்தையான ரஞ்ஜன் ராமசாமியும், பிரசித்தி பெற்ற விஞ்ஞானியாவார். அதனைத் தொடர்ந்து பிரித்தானியாவின் கேம் பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திலும் அவர் பட்டம் பெற்றுக் கொண்டுள்ளார்.

# சாயி வந்தனன்....

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மயக்கம் அடைந்துவிடுகின்றார். கருத்தரிக்கின்றார். இது பிரசவம் அன்று பிரவேசம் என்று தெளிவு பெறுகிறோம்.

இதுவே சாயி அவதாரத்தின் பின்புலமாகிறது. நாமகிரி அம்மா என்ற பெண்ணில் நல்லாள் ஈஸ்வாரம்மா ஆகின்றார். சாயி அவதாரம் எடுக்கின்றார். புட்டபர்த்தி கிராமம் சாயி ஈஸ்வரமாகிறது.

பகவான் பாபா தனது அவதார நோக்கத்தை மக்களின் நல்வாழ்வுக்காகத் தானே மலர்ந்தருளுவதைப் பாருங்கள்:–

'உங்கள் உள்ளங்களில் அன்பு என்னும் ஒளியினை ஏற்றி வைக்க வந்துள்ளேன். நாள்தோறும் அவ்வொளியினைப் பிரகாசிக்க வைப்பதே என் நோக்கம். புதிதாக ஒரு மதத்தை நிறுவவோ, அதற்கென அடியார்களைச் சேர்ப்பதோ என் நோக்கமன்று.

'அகிலமெங்கும் இறைவன் ஒன்றென்று இரு. அனைத்து மொழிகளிலும், அனைத்து உருவங்களிலும் மக்கள் வழிபடும் இறை ஏகனேயன்றி வேறன்று. அனைத்து மக்கள் மத்தியிலும், அனைத்து மதங்கள் மத்தியிலும், அனைத்து நாடுகள் மத்தியிலும் ஒருமைப்பாட்டினைக் காணுங்கள். அத்தகு ஒருமைப்பாட்டு உங்கள் உள்ளங்களில் மலரட்டும். இதுவே எந்தன் செய்தி!

'அன்பே இறைவன். இறைவன் அன்பு வடிவினன். அன்பு ஊற்றெடுக்கும் உள்ளங்கள் இவைனின் உறைவிடம். மக்களிடம் அன்பு செலுத்துங்கள். அவ்வன்பு மக்கள் சேவையாக முகிழ்த்தல் வேண்டும். ஈற்றில் மக்கள் சேவை வழிபாடாக மலர்ந்து, மகிழ்ச்சி, சாந்தி என்னும் நறுமணம் உங்கள் உள்ளங்களில் ஒளிர எந்தன் ஆசிகள்.!'

# இராணுவம், பொலிஸ் என்று கூறி மோசடியில் ஈடுபட்ட இருவர் கைது!

பொல்பித்திகம பகுதியில் இராணுவ சிப்பாய் என்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் என்றும் குறிப்பிட்டு பல மோசடி செயற்பாடுகளில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப்பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு ஒலிப்பதிவொன்றை வெளியிட்டுள்ள அவர் மேலும் கூறியவை வருமாறு –

பொல்பித்திகம பகுதியில் இராணுவ சிப்பாய் என்றும், புலனாய்வு பிரிவின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் என்றும் தங்களை போலியான முறையில் அடையாளப்படுத்தி மோசடிகளில் ஈடுபட்ட இரு சந்தேக நபர்களை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சந்தேக நபர்கள் இவ்வாறு போலியான முறையில் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டு, அந்த பகுதிகளில் பல மோசடிகளை செய்து வந்துள்ளனர்.

இதன்போது கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் என்று தன்னை அடையாளம் படுத்திக் கொண்ட 47 வயதுடைய நபர் வாரியப்பொல பகுதியைச் சேர்ந்தவர் என்றும், மற்றைய நபர் மாஹவ பகுதியை சேர்ந்தவர் என்றும் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

பொலிஸ் உத்தியோகத்தர் என்று தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட நபர் ,பொலிஸ் உடையில் புகைப்படம் ஒன்றையும் அருகில் வைத்துக் கொண்டுள்ளமையுடன், அதனைக் காண்பித்து இவ்வாறு மோசடியில் ஈடுபட்டுள்ளார் என்றும் தெரியவந்துள்ளது. சந்தேக நபர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொல்பித்திகம பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# விடைத்தாள் மதிப்பீட்டில் ஓய்வு பெற்றவர்களைத் தவிருங்கள் வெளிவாரிப் பணிப்பாளருக்குத் துணைவேந்தர் ஆலோசனை!

யாழ்ப்பாணம், நவ 23

யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடத்தப்படும் வெளிவாரிப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளின் போது, பல்கலைக்கழக சேவையில் இருந்து ஓய்வு பெற்ற பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களை முன்மொழிவதைத் தவிர்க்க வேண்டும் என்று துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா ஆலோசனை வழங்கியுள்ளார்.

யாழ். பல்கலைக்கழக மூதவைக் கூட்டம் கடந்த வாரம் இடம்பெற்றது. இதன் போது, பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடத்தப்படும் வணிகமாணி (வெளிவாரி) பரீட்சைக்காக கற்கை நெறி இணைப்பாளரால் முன்மொழியப்பட்டு, முகாமைத்துவ குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விடைத்தாள் மதிப்பீட்டாளர்களின் பட்டியல் பணிப்பாளரால் மூதவை அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப்பட்டது. இது குறித்துக் கருத்துத் தெரிவித்த போதே துணைவேந்தர் மேற் குறிப்பிட்டவாறு ஆலோசனை வழங்கினார்.

இதுபற்றித் துணைவேந்தர் மேலும் குறிப்பிடுகையில் -

ஓய்வு பெற்றுச் செல்பவர்களை அவர்களது ஓய்வுக் காலத்தை அனுபவிப்பதற்கு விட வேண்டும். அவர்களைத் தேவையான இடங்களில் ஆலோசகர்களாகக் கொண்டு, அவர்களுக்குக் கௌரவத்தை கொடுக்க வேண்டும். தேவையான திறமையும், தகுதியும் உள்ளவர்கள் தற்போது சேவையில் இருக்கிறார்கள். அவர்களை மதிப்பீட்டுப் பணிகளுக்குப் பயன்படுத்துங்கள்.

இதன் மூலம் முடிவுகளை வெளியிடுவதில் தேவையற்ற தாதமங்களைத் தவிர்க்க முடியும். - என்று திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் பணிப்பாளருக்குத் துணைவேந்தர் ஆலோசனை வழங்கினார் எனத் தெரியவந்தது.

## கொரோனாப் பீதியால் குருநாகல் மாவட்டத்தின் சகல தபால் நிலையங்களையும் மூடத் தீர்மானம்!

கொழும்பு, நவ. 23

தபால் ஊழியர்கள் 14 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து குருநாகல் மாவட்டத்தில் உள்ள அனைத்துத் தபால் நிலையங்களும் மறுஅறிவித்தல் வரும்வரையில் மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக குருநாகல் மாவட்டத்தில் உள்ள அனைத்துத் தபால் மற்றும் உப தபால் நிலையங்களையும் மீள் அறிவித்தல் வரை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

இதுவிடயம் குறித்து தாம் விடுத்துள்ள அறிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

குருநாகல் பிரதேசத்தின் தபால் அதிகாரியின் அலுவலகம் மற்றும் குருநாகல் பிரதான தபால் காரியாலயம் ஆகியவற்றில் கடமையாற்றும் 14 ஊழியர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியானதன் காரணமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குருநாகல் அஞ்சல் அதிகாரி காரியாலயத்தில் அண்மையில் 6 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றுறுதியானது.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் குறித்த 14 பேருக்கும் கொரோனா வைரஸ் தொற்றுறுதியாகியுள்ளது எனத் தெரியவந்துள்ளது.

## க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு விசேட சுகாதார வழிகாட்டல் கோரல்!

ஜனவரியில் நடைபெறவிருக்கும் கல்வி பொதுத்தராதர சாதாரண பரீட்சையின்போது கடைப்பிடிப்பதற்கு விசேட வழிகாட்டல்களை வழங்குமாறு கல்வியமைச்சு சுகாதாரத்துறையைக் கேட்டிருப்பதாக அமைச்சின் செயலாளர் கபில பெரேரா தெரிவித்தார்.

அடுத்த வருடம் இந்தப் பரீட்சைக்கு சுமார் 7 லட்சம் மாணவர்கள் தோற்றுகிறார்கள். பரீட்சையை நடத்துவதற்கு விசேட வழிகாட்டல்கள் தேவைப்படும் என்று பேராசிரியர் பெரேரா கூறினார்.

அடுத்த வருடம் ஜனவரி 18 தொடக்கம் 28 வரை பரீட்சையை நடத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

கொவிட் – 19 தொற்றுநோய்க்கு மத்தியிலும் கடந்த மாதம் க.பொ.த. உயர்தரப் பரீட்சையை கல்வித்துறையினராலும் சுகாதாரத் துறையினராலும் வெற்றிகரமாக நடத்திமுடிக்கக் கூடியதாக இருந்தபோதிலும், சாதாரண தர பரீட்சையில் கூடுதல் எண்ணிக்கையான மாணவர்கள் சகல மண்டபங்களிலும் இருப்பார்கள் என்பதால் விசேட சுகாதார வழிகாட்டல்கள் அவசியமாகின்றன. பரீட்சையை நடத்துவதில் சுமார் 35 ஆயிரம் ஆசிரியர்களும் பங்கேற்கிறார்கள் என்றும் பெரேரா கூறினார்.

இந்த பரீட்சைக்காக வழிகாட்டல்களைத் தயாரிப்பதில் தாங்கள் ஈடுபட்டிருப்பதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்தார்.

அதேவேளை, வழமையாக டிசெம்பர் மாதத்தில் நடைபெறுகின்ற இந்தப் பரீட்சை மீண்டும் ஒத்திவைக்கப்படுவதைத் தவிர்க்கும் நோக்குடன் பரீட்சைக்கான ஏனைய ஏற்பாடுகள் துரிதமாக முன்னெடுக்கப்படுகின்றன என்று கல்வியமைச்சின் அதிகாரியொருவர் கூறினார்.

பாடசாலைகளால் சாதாரணதர பாடவிதானங்களை பூர்த்திசெய்ய இயலாமல் போனதையும் கருத்தில் எடுத்தே வினாத்தாள்கள் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. எந்தளவுக்கு பாடவிதானங்களை பாடசாலைகள் பூர்த்தி செய்திருக்கின்றன என்பதை அறிய கல்வியமைச்சு ஆய்வொன்றை நடத்தவும் திட்டமிட்டிருக்கிறது.

## கோட்டா ஆட்சியில் இருக்கும் வரைக்கும் மாவீரர் நினைவேந்தலுக்கு இடமில்லை!

### ஆளுங்கட்சி எம்.பி. மேஜர் பிரதீப் உந்துகொட திட்டவட்டம்

கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதியாக இருக்கும்வரை, மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வை நடத்துவதற்கு ஒருபோதும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

- இவ்வாறு ஆளுங்கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மேஜர் பிரதீப் உந்துகொட தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சில தமிழ் அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகத் தமிழீழ விடுதலைப்புலிகளின் தாயக் கோட்பாட்டைத் தொடர்ந்தும் முன்னெடுக்கின்றார்கள். உயிரிழந்த விடுதலைப் புலிகளை நினைவு கூரும் மாவீரர் நாள் பற்றியும் நாடாளுமன்றத்தில் கதைக்கின்றார்கள்.

நாட்டில் தற்போது முதுகெலும் புள்ள அரசியல் தலைவர்களே ஆட்சியில் இருக்கின்றார்கள். எனவே, கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருக்கும் வரை மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வை நடத்துவதற்கு இடமளிக்கப்படாது - என்றார்.

## திருவையாறு மரண வீட்டில் சடலத்தை எடுத்துச் செல்ல 7 பேருக்கே அனுமதி!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.23

திருவையாறில் இடம்பெற்ற மரண வீட்டிற்கு கொழும்பில் இருந்து வந்த ஒருவரால் ஐந்து குடும்பங்களுடன் மட்டும் மரண நிகழ்வை நடத்தும் நிலைமை ஏற்பட்டது.

இறந்தவரின் மகள் கொழும்பு, ஆட்டுப்பட்டித் தெருவில் இருந்து மரண வீட்டுக்கு வந்த நிலையில் அவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது. இதனையடுத்து அயலவர்கள் அனைவரும் மரண வீட்டிற்குச் செல்ல அஞ்சுவதோடு, அந்த வீடு தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. குடும்ப உறவுகள் மட்டுமே மரண நிகழ்வை நடத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

இன்று இறுதிக் கிரியைகள் மேற்கொள்ளப்பட்டபோது 7 பேர் மட்டுமே சடலத்தை எடுத்துச் செல்ல சுகாதாரத் தரப்பினர் அனுமதி வழங்கினர்.

இறந்தவரின் முதல் உறவுகளான 5 குடும்பங்கள் செத்த வீட்டில் பங்குபற்றின. அந்த ஐந்து குடும்பங்களும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அந்த ஐந்து குடும்பங்களுடன் எந்தவிதக் கிரியைகளும் இன்றியே மரண வீடு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## சாவகச்சேரி நபரின் சாவுக்கு டெங்கு நோயே காரணமாம்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,நவ.23

சாவகச்சேரி வைத்தியசாலையில் திடீரென உயிரிழந்தவரின் மரணத்திற்குக் காரணம் டெங்கு என நேற்றைய தினம் கண்டறியப்பட்டுள்ளது.

சாவகச்சேரி வைத்தியசாலையில் காய்ச்சல் காரணமாக நேற்று முன்தினம் அதிகாலை உயிரிழந்தவர் கொரோனா நோய் காரணமாக உயிரிழந்தாரா என அச்சம் தெரிவிக்கப்பட்டு சடலம் உடனடியாக பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இருந்தபோதும் உயிரிழந்தவரிற்கு கொரோனா இல்லை எனக் கண்டறியப்பட்டதனால் உயிரிழந்தவரின் சடலம் உறவுகளிடம் ஒப்படைக்கப்படுவதற்காக பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இவ்வாறு மேற்கோண்ட பிரேத பரிசோதனையின்போதே இறப்பிற்கு டெங்கு நோய்த் தாக்கமே காரணம் எனக் கண்டறியப்பட்டது.

(மற்றுமொரு செய்தி 05 ஆம் பக்கத்தில்)


கல்யாணமாலை

வட சர்வதேச திருமண சேவை





**மணமகன் விவரம்**

பிறந்த திகதி - 1973.03.11
மதம் - இந்து V
நட்சத்திரம் - ரோகினி
பாவம் - 43
சூ/செவ் - 12இல்
கல்வி - பட்டதாரி
தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - அரச தொழில் புரியும் பெண் தேவை

**மணமகள் விவரம்**

பிறந்த திகதி - 1995.10.10
மதம் - இந்து V
நட்சத்திரம் - அச்சுவினி
பாவம் - 28
செவ் - -----
கல்வி - பட்டதாரி
தொழில் - -------
எதிர்பார்ப்பு - அரச உத்தியோகம்

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

077 3434 415
077 8578 528


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.11.2020 இல் வெளியிடப்பெற்றது.

# கொரோனாவுக்குப் பின்னரான உலகம்
# இயற்கைக்கான தருணம்

## வடமாகாண மரநடுகை மாதம்
## கார்த்திகை 1-30, 2020



**ஆளுக்கொரு மரம் நடுவோம்**
**நாளுக்கொரு வரம் பெறுவோம்**

கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

விளம்பர அனுசரணை:- காலைக்கதிர் Kalaikkathir